Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியக் கலாச்சாரம்

ஆசிரியர்:

முகம்மது ஸமீம் B. A (Hons)

ஸபீனா பதிப்பகம்

39, டயஸ் பிளேஸ் — கொழும்பு-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு ஜூன் 1962
முஹர்ரம் *1382*
உரிமை ஆசிரியர்க்கு

ஸபீனு வெளியீடு 2

விற்பனை உரிமை:-
**நவலட்சுமி புத்தகசாலை**
*136*, செட்டியார் தெரு,
கொழும்பு-*11*.

விலை ரூ. 2.00

சபீனு அச்சகம்
கொழும்பு-*12*.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கௌரவ டாக்டர். அல்ஹாஜ்
பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள்
கல்வி, ஒலிபரப்பு அமைச்சர்.

இஸ்லாத்தைப் பின்பற்றும் ஒருவனை நாம் 'முஸ்லிம்' என்கிறோம். அவன் எந்த இனத்தைச் சேர்ந்தவனாயிருந்தாலும், எந்த நாட்டில் பிறந்தவனாயிருந்தாலும், எந்த மொழியைப் பேசுபவனாயிருந்தாலும், அவன், ஒரு முஸ்லிம் என்றே கணிக்கப்படுகிறான். இதுதான் இஸ்லாத்தின் பெருமை. ஒரு காலத்தில் ஒரே கொடையின்கீழ் வாழ்ந்த முஸ்லிம்கள் இன்று உலக முழுவதிலும் பரவியிருக்கின்றனர். உலகத்தின் பல பாகங்களிலும் இவர்கள் வாழ்ந்தாலும், தம்மிடையே ஒரு வித ஒற்றுமையிருக்கிறது என்பதையும் இவர்கள் உணரத்தான் செய்கிறார்கள். நாடு, மொழி, இனம், என்ற பற்பல வேறுபாடுகள் இருந்தாலும், இஸ்லாம் என்ற அடிப்படைத் தத்துவத்தைப் பின்பற்றி வாழ்கிற காரணத்தினால், இவர்களிடம், மற்ற மக்களிடம் காணமுடியாத ஒருவித சகோதர மனப்பான்மை இருப்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். வேற்றுமையில் ஒற்றுமை காணும் தன்மை முஸ்லிம்களிடையே இருக்கும் ஒரு தனிச் சிறப்பு. உலகமெங்கும் பரவலாக வாழும் இவர்களிடையே இஸ்லாமிய சகோதரத்துவம் இழையோடிச் செல்வதை நாம் காண்கிறோம்.

இஸ்லாமிய சகோதரத்துவத்துடன் பின்னிப் பிணைந்து ஒன்றி நிற்பதுதான் இஸ்லாமிய சமதர்மம். ஆண்டவன் படைப்பில் ஏற்றத்தாழ்வு இல்லை மனிதனுக்கு மனிதன் சமம் என்ற கொள்கையை உலகிற்கு முதன் முதலில் புகுத்திய பெருமை இஸ்லாத்தையே சாரும். இஸ்லாமிய பொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுடமை அடிப்படையில் எழுந்ததுதான் இஸ்லாமிய சாம்ராஜ்யம். இஸ்லாத்தின் சட்ட திட்டங்களை நாம் கவனிக்கும் போதும், அதன் அடிப்படைத் தத்துவத்தை நாம் அவதானிக்கும்போதும், இந்தப் பொதுவுடமைக் கொள்கை உள்ளடங்கியிருப்பதை நாம் காணலாம்.

இந்த சிறப்புக்கள் வாய்ந்ததுதான் இஸ்லாமிய கலாச்சாரம், அல்லது இஸ்லாமிய பண்பாடு, இஸ்லாமிய கலாச்சாரத்தின் தோற்றம், அதன் அடிப்படைத் தத்துவம், அதன் அம்சங்கள் ஆகியனவற்றை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து, தனக்கே உரித்தான நடையில், மிகவும் இலகுவான முறையில் இந் நூலாசிரியர் விளக்கியிருக்கிறுர்.

இந் நூலாசிரியரான ஜனுப் முகம்மது சமீம் அவர்களுக்கு வரலாற்றுத்துறையில் இருக்கும் ஆர்வமும், இஸ்லாமிய பண்பாட்டில் அவருக்கிருக்கும் ஈடுபாடும், அவர் இந் நூலை எழுதக் காரணமாயிருக்கலாம். இவருடைய ஏனைய படைப்புக்களான, இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள், இலங்கை முஸ்லிம் வரலாறு, இலங்கை முஸ்லிம் பெரியார்கள் ஆகியன, இவர் ஒரு சிறந்த வரலாற்ருசிரியர் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றன.

இஸ்லாமிய கலாச்சாரம் பற்றி இலங்கையிலேயே வெளிவரும் முதல் நூல் இதுதான். முஸ்லிம்களின் வாழ்க்கை அமைப்பையும், அவர்களின் பண்பாட்டு அமைதியையும், ஏனைய சமூக மக்களும் அறியும் வண்ணம் எழுதியதற்காக அவருக்கு நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். இந் நூலாசிரியரைப்போல ஏனைய முஸ்லிம்களும் எழுத்துத் துறையில் ஈடுபட்டு முஸ்லிம்களின் பெருமையை நிலைநாட்ட முற்பட வேண்டும்.

ஒப்பம்

அல்ஹாஜ் பத்யுத்தின் மஹ்மூத்.

கல்வி, ஒலிபரப்பு அமைச்சர்.

கொழும்பு.

25-5-62.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

"இஸ்லாமிய கலாச்சாரம்" என்றால் என்ன? என்ற கேள்வி அடிக்கடி நம் மத்தியில் எழுகிறது. இல்லையா? எமக்கென்றே ஒரு தனிப் பண்பாடு இருக்கிறது என்பதை நமக்குள்ளே சொல்லிக் கொண்டிருக்காமல், பிறரும் அறியும் வண்ணம் எடுத்துக் காட்டுவது நல்லதல்லவா? இந்த எண்ணத்தின் அடிப்படையில் தோன்றியதுதான் இந் நூல்.

ஒரு சமூக மக்களைப் பற்றி அறிவதற்கு அவர்களுடைய வாழ்க்கை முறை, பண்பாட்டு அமைதி இவைகளை அறிந்தாற்றான் அவர்களைப் பற்றிய உண்மையான கருத்தைக் கொள்ளலாம். முஸ்லிம்களுக்கும், பிற சமூகத்தாருக்குமிடையே நல்லெண்ணம் வளர வேண்டுமானால், முஸ்லிம்களைப் பற்றி அறிய அவர்கள் முயலவேண்டும். முஸ்லிம்களின் பண்பாடு என்ன? என்பதை ஓரளவாவது இந் நூல் விளக்கினால் அதுவே போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குறிப்பிட்ட மக்களின் வாழ்க்கை முறையிலிருந்து பிறப்பதுதான் கலாச்சாரம். அதே சமயத்தில் அது அம் மக்களின் வாழ்க்கையையும் பாதிக்கிறது. மக்களின் வளர்ச்சியோடு கலாச்சாரமும் வளர்கிறது அவர்களின் வீழ்ச்சியோடு கலாச்சாரமும் சிதைவுறுகிறது. மனித சமுதாயத்தை அறிக்க முயலும் இனவெறி, வகுப்பு வாதம், வர்க்கபேதம், சாதித் துவேஷம் ஆகியனவற்றின் செல்வாக்கைக் குறைத்து, மனித இனம் சுபிட்சமாக வாழ்வதற்கு இந்தப் பண்பாடு உதவுகிறது என்ருல் மிகையாகாது.

ஒரு முஸ்லிமின் இருதயம் என்ற விளை நிலத்திலிருந்து தோன்றியதுதான் இஸ்லாமிய கலாச்சாரம் என்ற விருட்சம். அவனுடைய அன்ருட வாழ்க்கை, சிந்தனை, செயல் ஆகியனவற்றையெல்லாம் பாதித்தது. தனக்கென்றே ஒரு சமுதாய அமைப்பையும், பொருளாதாரத் திட்டத்தையும், அரசியல் முறையையும் அமைத்து, 'ஷறியத்' என்ற நீதியின் படி ஒழுகிவந்தான் முஸ்லிம். அவனுடைய சிந்தனையின் ஓட்டம், தற்கால விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கு அடிகோலியது. அவனுடைய சாதனை, கலை, இலக்கியம், தத்துவம் ஆகியன வற்றில் பரிணமித்தது.

பிற கலாச்சாரங்களின் செல்வாக்கு இஸ்லாமிய கலாச்சாரத்தை வளர உதவியன என்ருலும், இஸ்லாமிய கலாச்சாரத்தின் வளர்ச்சியினுல் பாதிக்கப்பட்டு, அவை சிறப்புற்றன என்ருல் அது மிகைபடக் கூறுவதன்று.

இஸ்லாமிய கலாச்சாரம் என்பது, அரபிய கலாச்சாரமோ, பாரசீக கலாச்சாரமோ, முகலாய கலாச்சாரமோ அல்ல. அது ஒரு இன அடிப்படையிலோ, மொழியடிப்படையிலோ அல்லது தேசிய அடிப்படையிலோ எழுந்ததும் அல்ல. சுருங்கச் சொன்னுல், இஸ்லாமிய கலாச்சாரம், குர்ஆன் கலாச்சாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம் என்பது ஒரு வாழ்க்கை முறை. அந்த வாழ்க்கை முறையின் அடிப்படையில் எழுந்ததுதான் இஸ்லாமிய சமுதாய அமைப்பும். சமுதாய அமைப்புக்களில் என்னென்ன மாறுதல்கள் ஏற்பட்டாலும், இஸ்லாமிய சமுதாய அமைப்பு அதன் இலட்சியம் பிறழாமல் நிற்கும் தன்மையுடையது. குர்ஆனின் அடிப்படையில் தனது வாழ்க்கையையே அமைத்திருக்கும் ஒரு முஸ்லிம், சமுதாயத்தில் எந்த மாறுதல் ஏற்பட்டாலும், தனது மத நம்பிக்கையிலிருந்து வழுவாது ஒழுகுவான் என்பது திண்ணம்.

இஸ்லாமிய வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கும் போது, முஸ்லிம்களின் சாதனைகள் உலக முன்னேற்றத்திற்கு எவ்வளவு பயன்பட்டன என்பது தெரியவருகிறது. குர்ஆன் விளக்கப்படி வாழ்க்கை தொடர்ந்து முன்னேறவேண்டும். இந்த அடிப்படையில் எழுந்த இஸ்லாமிய கலாச்சாரத்தின் இதய நாதமாக விளங்கியது 'முன்னேற்றம்' என்ற குறிக்கோள். இயற்கையின் சக்திகளை மனித முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தி மனித சமுதாயம் வாழ வழி அமைத்தார்கள் முஸ்லிம்கள்.

—அண்மையில், தனது சுற்றுப் பிரயாணங்களில், கல்வி மந்திரி அல்ஹாஜ் பத்யுதீன் மஹ்மூத் அவர்கள் முஸ்லிம்களின் பண்டைய வரலாற்றைப் பற்றிய உண்மைகளை உணர்ச்சியுடன் மக்களுக்கு எடுத்துக் காட்டினர். அவர் தட்டி எழுப்பிய உணர்ச்சியின் பிரதிபலிப்பாக எழுந்ததுதான் இந் நூல். இந் நூல் தோன்றுவதற்குக் காரண கர்த்தராயிருந்த அன்னவருக்கு எனது நன்றி உரித்தாகுக. இந் நூலுக்கு அணிந்துரை எழுதி இதனைச் சிறப்பித்ததற்கும் அவருக்கு நான் கடமைப் பட்டுள்ளேன்.

இந் நூலைத் தங்கள் இரண்டாவது வெளியீடாகக் கொண்டுவரும் ஸபீனு பதிப்பகத்தாருக்கு நான் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன்.

முகம்மது சமீம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**-: ச மர் ப் ப ண ம் :-**

''என் தந்தைக்கு''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ⁘ பதிப்புரை ⁘

தமிழ் உலக இஸ்லாமியப் பெருமக்களிடையே அவர்களின் கலை, கலாச்சார, இலக்கிய நூல்கள் மிகமிகக் குறைவாக இருந்து வருகின்றன. இக் குறைபாட்டினை நீக்கும் முயற்சியாக, இஸ்லாத்தின் அறிவியற் செல்வங்களை, இலக்கியப் புதையல்களை, வரலாற்றுப் புதுமைகளை, இன்பத் தமிழிலே வெளிப்படுத்த வேண்டும் என்பது நமது வேட்கை.

நமது இலட்சியத் துணிவின் இரண்டாவது முயற்சியாக, 'இஸ்லாமிய கலாச்சாரம்' என்னும் இத் திருநூலை தமிழ்ப்பெருமக்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

வரலாற்றுத்துறை அறிஞர் ஜனாப். முஹம்மது ஸமீம் அவர்களின் ஆராய்ச்சிப் பயனாய் எழுந்த இந் நூல்; தமிழகத்தில் மிகுந்த வரவேற்பைப் பெறும் என்று நம்புகிறோம்.

தமிழகம்—குறிப்பாக இஸ்லாமியப் பெருமக்கள், எமது முயற்சிக்கு நல்கும் பேராதரவு, எமது குறிக்கோளை வளப்படுத்தும் என்றும் கருதுகின்றோம்.

ஸபீனா பதிப்பகத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை

★


| | | |
|---|---|---|
| 1. | உலக வரலாற்றில் முஸ்லிம்கள் | 9 |
| 2. | அரபு மொழியும், இஸ்லாமிய பண்பாடும் | 21 |
| 3. | இஸ்லாமிய உலகில் வளர்ந்த கலைகள் | 35 |
| 4. | இஸ்லாமிய கலாச்சாரத்தின் தோற்றம் | 45 |
| 5. | இஸ்லாமிய கலாச்சாரத்தின் அம்சங்கள் | 57 |
| 6. | இஸ்லாமிய கலாசாரத்தின் அடிப்படைத் தத்துவங்கள் | 69 |
| 7. | இஸ்லாமியசகோதரத்துவம் | 80 |
| 8. | இஸ்லாமிய கலைகள் | 91 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய கலாச்சாரம்

## 1. உலக வரலாற்றில் முஸ்லீம்கள்.

நாகரிகப்படியில் மனிதன் எடுத்துவைத்த ஒவ்வொரு அடியிலும் அவனுடைய முயற்சியின் சின்னம் பதிந்திருப்பதைக் காண்கிறோம். இந்த ஒவ்வொரு அடியிலும், அவனுடைய தியாகத்தின் சின்னமாக இரத்தக் கறை, பதிந்திருப்பதையும் காண்கிறோம்.

கால ஏட்டைப் புரட்டிப் பார்க்கும்போது தான் மனித சமுதாயம் எவ்வளவு பெரிய தியாகங்களைச் செய்திருக்கிறது என்பது தெரியவருகிறது. எண்ணற்ற சாம்ராஜ்யங்கள் தோன்றி மறைந்தன. எண்ணிலடங்காத சக்ரவர்த்திகள் மாண்டு மண்ணோடு மண்ணாகி மறைந்திருக்கின்றனர். அவர்கள் வாழ்ந்த சுவடுகூட இல்லாமல் மறைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித இனத்தின் வளர்ச்சிக்கு இச்சாம்ராஜ்யங்களும், நாகரீகங்களும், தம்சேவையையாற்றியே மடிந்திருக்கின்றன. ஒரு காலத்தில் மனித சமுதாயத்திற்கு வாழ்வை வகுத்துதவிய இந்நாகரிகங்கள் காலதேவனின் இரும்புப்பிடியில் அகப்பட்டுச் சுக்கு நூருகி, மண்ணோடு மண்ணுகக் கலந்தன. மனித சமுதாயத்திற்குத் தலைமை தாங்கிச் சென்ற இம்மக்களின் வழித்தோன்றல்கள் இன்று நாகரிகப் படியில் பின்னிற்கின்றனர்.

உலகத்தின் பெரும்பாகத்தை அஞ்ஞானம் என்ற இருள் சூழ்ந்திருந்த காலத்தில், நாகரிக விளக்கு இஸ்லாமிய சாம்ராஜ்யத்தில் ஒளிவீசிப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. உலகத்தின் பெரும்பாகம் இருளில் மூழ்கியிருந்த காலத்தில் இஸ்லாமிய சாம்ராஜ்யம் நாகரிகத்தின் உச்சியில் வீற்றிருந்தது. ஐரோப்பா முழுவதையுமே ஆண்ட கிரேக்க, உரோம சாம்ராஜ்யங்கள், இருந்த இடந்தெரியால் மண்ணோடு மண்ணுகியிருந்தன. உரோம சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்த காலந்தொட்டு-அதாவது கிறிஸ்துவுக்குப் பின் 5-ஆம் நூற்றுண்டிலிருந்து 15ஆம் நூற்றுண்டுவரையுமுள்ள காலப் பகுதியில், ஐரோப்பா முழுவதுமே வடக்கே இருந்து வந்த அநாகரிகக் கூட்டத்தாரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. இந்தக் கால கட்டத்தைத்தான் சரித்திராசிரியர்கள் " இருண்ட சகாப்தம் " என்று அழைக்கிறுர்கள். கிரேக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரோம நாகரிகங்களின் சேவை உலகத்தில் அழிந்துவிட்டதென்று கருதப்பட்ட காலத்திற்றுதான் முஸ்லிம்கள் உலக நாகரிக வளர்ச்சிக்குத் தங்கள் சேவையை ஆற்றத் தொடங்கினர்.

ஐரோப்பாவில் ஸ்பெயின் தேசத்திலிருந்து மத்திய ஆசியாவில் சமார்க்கண்ட் வரைக்கும் பரந்திருந்த இஸ்லாமிய சாம்ராஜ்யம் ஒருகாலத்தில் உலகத்திலேயே தலைசிறந்து விளங்கியது.

உலக வரலாற்றிலேயே இதுவரைக்கும் தோன்றியிராத உன்னத சாம்ராஜ்யமாக அது விளங்கிற்று. அன்றைய உலகத்தின் பெரும்பாகத்தை உள்ளடக்கி; உலக மக்களுக்கு நல்லாட்சியை வழங்கியது, இஸ்லாமிய சாம்ராஜ்யம். இவ்வளவு அகன்ற நிலப்பரப்பைக் கொண்ட சாம்ராஜ்யம் மனித வரலாற்றிலேயே அன்றுவரைக்கும் இருந்ததில்லை என்பது சரித்திரம் கண்ட உண்மை.

இஸ்லாத்தின் பிறப்பிடமாகிய அரேபியா ஒருகாலத்தில் அநாகரிகத்தின் இருப்பிடமாக இருந்தது. இங்கு வாழ்ந்த மக்கள் பொறாமையும், வஞ்சகமும் நிறைந்து தங்களுக்குள்ளே சண்டைசெய்து கொண்டிருந்தனர். பாரசீக; உரோம சாம்ராஜ்யங்களின் கீழ், அடிமை வாழ்வு வாழ்ந்தனர். இவ்விரு சாம்ராஜ்யங்களாலும், சுரண்டப்பட்டும், அடிமைகளைப்போல் நடாத்தப்பட்டும் பெரிதும் அல்லலுற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தைப் பற்றிய எந்தவித நம்பிக்கையும் இல்லாமல் அடிமை வாழ்வில் உழன்று வந்த இவர்களின் மத்தியில் ஆண்டவன், தனது திருத்தூதரை அனுப்பிவைத்தான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அநாகரிக வாழ்க்கையில் குமைந்து கிடந்த இம்மக்களுக்கும், உலக மாந்தருக்கும் இறைவனின் நற்பாதையைக் காண்பிக்கும் பொருட்டு அரேபியால் தோன்றினார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்போதனைகளால் இம்மக்கள் நல்வாழ்க்கை வாழத் தொடங்கினர். அநாகரிகத்திலும், அடிமை வாழ்விலும் ஊறித்திளைத்திருந்த அரேபிய மக்கள் இஸ்லாத்தைத் தழுவிய நாளிலிருந்து ஒரு புதிய பாதையில் நடக்கத் தொடங்கினர்.

இஸ்லாத்தின் தோற்றம், மனித வரலாற்றிலேயே மாபெரும் புரட்சியொன்றை உண்டு பண்ணியது. மனித வரலாற்றுக்கு ஒரு திருப்பத்தைக் கொடுத்து; மனித சமூகத்தை ஒரு புதிய பாதையில் இட்டுச் சென்றது என்றால் மிகையாகாது.

பொறாமையினாலும், வஞ்சகத்தினாலும் பிளவுபட்டு ஒருவரையொருவர் பகைத்துக்கொண்டு, அதர்ம வாழ்க்கையில் பொருதிக் கொண்டிருந்த அரேபிய மக்கள் இஸ்லாத்தினால் பிணைப்புற்று, எண்டிசைகளுக்கும் சென்று தங்கள் வெற்றிக் கொடியை நாட்டினர். அரேபியப் பாலைவனங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளில் மந்தை மேய்த்துக்கொண்டிருந்த அரேபியர்கள் முப்பது வருடங்களில் அன்றைய உலகத்தின் மூன்றிலொரு பாகத்தைத் தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர். போர்க்களத்தில் அரேபிய வீரர்கள் ஆற்றிய வீர தீரச் செயல்களைப் பற்றி வியந்து புகழாத ஆசிரியரே இல்லை. ''அல்லாஹு அக்பர்'' என்ற இதய முழக்கத்துடன், அவர்கள் யுத்தகளத்தில் புகுந்தால் எதிரிகளின் தலைகள் உருண்டுகொண்டே இருக்கும். எந்தப் பெரிய படையை எதிர்க்க நேர்ந்தாலும் இந்த நாதத்துடன் அவர்கள் யுத்தகளத்தில் புகுந்தால் வெற்றி என்பது நிச்சயம். இந்த நாதத்தைக் கேட்டவுடன் எதிரிகள் சிதறி ஓடத்தலைப்படுவர்.

''அல்லாஹு அக்பர்'' என்ற அமரநாதத்தில் என்ன மந்திரசக்தியிருந்ததோ, கொடிகட்டி இறுமாப்புடனிருந்த பண்டைய சாம்ராஜ்யங்கள், இதை உச்சரித்துக் கொண்டுவந்த அரேபிய வீரர்களுக்கு முன்னிற்க முடியாமல் மண்மேடுகள் சரிவதைப்போல் சரிந்தன. பைஸைன்தைன், பாரசீக சாம்ராஜ்யங்கள் முஸ்லீம்களின் தாக்குதலுக்கு ஈடுதர முடியாமல் வீழ்ந்தன. இஸ்லாமிய சாம்ராஜ்யம் மூன்று கண்டங்களிலும் பரவியிருந்தது.

அரேபியர்கள் வீரதீரச் செயல்களில் எவ்வளவு புகழடைந்தார்களோ அதேபோல் கல்வியறிவிலும் மேம்பட்டிருந்தார்கள் அநாகரிக வாழ்க்கையில் ஊறிப்போயிருந்த அரேபியர்கள் நபிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகம் (ஸல்) அவர்களின் நற்போதனைகளினால் பண்புள்ளவர்களாகப் பரிணமித்தார்கள்.

புண்பட்டுப் புரையோடியிருந்த மனித சமுதாயம், இஸ்லாத்தின் தோற்றத்தினால், புத்துணர்வு பெற்றுப்புதுவாழ்வு காணதொடங்கியது. ஐரோப்பியமக்கள் உளுத்துப்போன உரோம் சாம்ராஜ்யத்திற்குச்சாவுமணியடித்துவிட்டுஅநாகரிகவாழ்வில் தத்தளித்துக்கொண்டிருந்த அதேசமயத்தில் மத்தியதரைக் கடல் பகுதிகளில் முஸ்லீம்கள் உன்னதமான நாகரிகத்திற்கு அத்திவாரம் இட்டு வளர்த்துக்கொண்டிருந்தனர். ஐரோப்பாக் கண்டமே அறியாமை என்னும் இருளில் மூடப்பட்டு, அந்தகாரத்தினால் சூழப்பட்டிருந்தபோது மனித சமுதாயத்திற்குத் தலைமை தாங்கி முன்னேற்றப் பாதையில் வீறுநடை போட்டுக்கொண்டிருந்தனர் முஸ்லீம்கள்.

''சீனம் சென்றாயினும் ஞானம் தேடு'' என்ற நாயகத்தின் வாக்கு அரேபியர்களை ஒரு புதுப்பாதையில் இட்டுச் சென்றது.

''ஒரு தியாகியின் மரணத்தைவிட மேலானது எழுத்தாளனின் பேனா'' என்றும் ''அறிவைத் தேடிச்செல்பவன் ஆண்டவன் பாதையில் செல்லுகிறான்'' என்றும் எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளிப்போந்தார்கள். கல்வியின் மேன்மையை இவ்வாறு உணர்த்தினார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் நபி பெருமானுர் அவர்கள். நாயகத்தின் நற்போதனைகளினுல் பெரிதும் பாதிக்கப்பட்ட அரேபியர்கள் அறியாமை என்னும் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து, உலக நாகரிக வளர்ச்சிக்கு என்றும் அழியாத தங்கள் தொண்டையாற்றினுர்கள். உலக விஞ்ஞான வளர்ச்சியில் முன்னேடிகளாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் தொடங்கிய கல்வி ஸ்தாபனங்கள், நாளடைவில் வளர்ந்து உலகப் புகழ் பெற்ற சர்வகலாசாலைகளாகத் திகழ்ந்தன. பாக்தாத், செலர்னே, கெய்ரோ, கார்டோவா, கிரேனடர், டமஸ்கஸ், மலாகா போன்ற நகரங்களில் உருவான சர்வகலாசாலைகள் உலகப் பிரசித்தி பெற்றவை. இலக்கியம், கவிதை, அறிவியல், பொருளியல், மருத்துவம், தத்துவம், தர்க்கம் முதலிய துறைகளில் முஸ்லிம்கள் சிறப்புற்று விளங்கினுர்கள்.

அரேபிய நாகரிக வளர்ச்சி மேலோங்கி நின்ற வேளையில், ஐரோப்பாக் கண்டத்தில் அறியாமையைப்போற்றி வணங்கினர் மக்கள். இஸ்லாமிய சாம்ராஜ்யத்தில் அறிவு என்னும் விளக்கு ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த அதே சமயத்தில், ஐரோப்பிய மக்கள் கல்வியறிவே இல்லாத மக்களாக வாழ்ந்தனர்.

கி.பி. 5ஆம் நூற்ருண்டில் ஐரோப்பா கண்டமெங்கும் பரவிய அஞ்ஞானம் என்ற இருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளுக்கு நாள் பரந்து கவிந்து ஐரோப்பா முழுவதையுமே அந்தகாரத்தில் ஆழ்த்தியது. இந்தக் கால கட்டத்தில் தங்கள் மதத்திலிருந்த அளவு கடந்த நம்பிக்கையினுல், ஐரோப்பிய மக்கள், புதிய கருத்துக்கள் எவற்றையும் வரவேற்க அஞ்சினுர்கள். நாகரிகத்தின் ஒளி தங்கள் மேல் படாதவண்ணம் அநாகரிக இருளில் ஒளித்துக்கொண்டனர். இதனுல் இஸ்லாமிய நாகரிகத்தின் வளர்ச்சியைக் கூட இவர்கள் காணத்தவறி விட்டார்கள்.

உரோம சாம்ராஜ்யத்தின் ஒரு பிரிவாகிய பைசன்தைன் சாம்ராஜ்யத்தை ஆண்ட சக்ரவர்த்திகள், முன்னைய சக்ரவர்த்திகளால் போற்றி வளர்க்கப்பட்ட வாசகசாலைகளை அழித்தனர். கல்வி கற்பது அரசாங்கத்துக்கு விரோதமாகச் செய்யும் காரியம் என்றும் பறைசாற்றினர். விஞ்ஞானத்தையும், தத்துவ சாஸ்திரத்தையும் நாட்டைவிட்டே அகற்றிவிட்டனர்.

பண்டைய கிரேக்க, உரோம இலக்கியங்களைப் படிப்பது நாட்டுக்கும், மதத்துக்கும் துரோகம் செய்வதை ஒக்கும் என்ற அபிப்பிராயத்தை ஆளும் வர்க்கத்தினர் மக்கள் மத்தியில் பரப்பிவிட்டனர். இவ்வுலக வாழ்க்கை வெறும் மாயை என்றும், இந்த மாயையில் சிக்கிவிடா வண்ணம் மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்றும், சிற்றின்பத்தைப் பற்றியே பேசுகின்ற கிரேக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரோம இலக்கியங்களை மக்கள் படிக்கக் கூடா தென்றும் பிரசாரம் செய்தனர். அறிவைத் தேடு வதே அபாயம் என்றளவுக்கு அவர்கள் போதனை யிருந்தது. அன்றைய ஐரோப்பிய மக்கள் உணர் வொடுங்கிய நிலையில் இவற்றையெல்லாம் நம்பி அறியாமையிலேயே மூழ்கிக்கிடந்தனர்.

அதே நேரத்தில் அரேபியாவில் நபிகள் நாய கம் (ஸல்) அவர்களின் நற்போதனைகளால் அரே பிய மக்கள் பண்பட்ட உள்ளத்தினராய் கல்விக் கும், கலாவிற்பனர்க்கும், கல்விக் கூடங்களுக்கும் பெரும் மதிப்புக் கொடுத்து ஓம்பினர்.

வெற்றிமாலை சூடிக்கொண்டு திக் விஜயம் செய்த அரேபிய வீரர்கள், மதஸ்தாபனங்களுக்கும், ஆய்வு கூடங்களுக்கும், வாசிகசாலைகளுக்கும் எந்தவித இடையூறும் விளைவிக்கவில்லை. அதற்கு நேர் மாருக இவைகளைப் போஷித்து வளர்த்தார் கள். மெக்ஸ் மெயரோப்ட் (*Max Mayerohof*) என்ற சரித்திராசிரியர் ''அரேபியர்கள் வட ஆபிரிக்கா வையும், பைசன்தைன் சாம்ராஜ்யத்தையும் வென்ற பிறகு அப்பகுதிகளில் அமுலிலிருந்த ஆட்சி முறையையும், விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களை யும் அப்படியே பாதுகாத்து வந்தார்கள்'' என்று கூறுகிருர்.

அலெக்சாந்திரியாவிலிருந்த மாபெரும் வாசிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலையை முஸ்லீம்கள் தீக்கு இரையாக்கினர் என்ற கதை, ஆதாரமற்ற கூற்று என்பது சரித்திர ஆசிரியர்கள் கண்ட முடிவு. இந்த வாசிகசாலையை தீக்கு இரையாக்கியவன் உரோம சாம்ராஜ்யத்தின் முக்கிய தளபதியாக எகிப்தின் மீது படையெடுத்த ஜூலியஸ் சீசர் என்பது ஆராய்ச்சியாளர்கள் கண்ட உண்மை.

முஸ்லிம்களின் மேல் இந்தக் குற்றச்சாட்டை சுமத்திய ஐரோப்பிய விஷமக்காரர்கள் அதே நேரத்தில் தங்கள் படைவீரர்கள் முஸ்லிம்களின் கலைக்கூடங்களை அழித்ததை மட்டும் மூடி மறைத்து விட்டனர்.

வரலாற்றில் நடந்த நெஞ்சை உருக்கும் சம்பவம் என்னவென்ருல், பலநூற்ருண்டுகளாக இஸ்லாமிய சாம்ராஜ்யத்தில் கட்டி வளர்த்து பாதுகாக்கப்பட்டு வந்த கலைப் பொக்கிஷங்கள் மதத்துவேஷம் கொண்ட ஐரோப்பியர்களின் கையிலகப்பட்டு அழிந்ததே! இஸ்லாமிய நாகரிகத்தின் தலைசிறந்த கலைப்பணிகள் உலகத்தாருக்குப் பயன்படாமல் போயின. திருப்போலியின் மாபெரும் வாசிகசாலை இவர்கள் கையிலகப்பட்டு சின்னுபின்னமாகியது. இஸ்லாம் உலகுக்களித்த மாபெரும் கலைகளெல்லாம் 'இவை முஸ்லிம்களின் சாதனை' என்ற ஒரே காரணத்திஞல் அவை அழிக்கப்பட்டன. இந் நாசகாரர்களின் கைகளுக்கு அகப்படா வண்ணம் எஞ்சியிருந்த ஒருசில தான் உலகுக்குப் பயன்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்பெயின் தேசத்தில் முஸ்லிம்கள் வளர்த்த நாகரிகம் அஞ்ஞான இருளில் மூழ்கிக்கிடந்த ஐரோப்பா கண்டத்துக்கே அறிவு ஒளியைக் கொடுத்துக் கொண்டிருந்தது. பிற்காலத்தில் ஐரோப்பாவின் முன்னேற்றத்திற்குக் காரணரா யிருந்த அறிஞர்கள் ஒரு காலத்தில் இஸ்லாமிய அறிஞர்களான அவிசென்னு, அவற்ரேஸ், இப்னு கல்துன் போன்றவர்களிடம் கல்விகற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்பெயினிலிருந்த இஸ்லாமிய அரசு, உள்நாட்டுக் குழப்பங்களால் பாதிக்கப்பட்டு வீழ்ச்சியுற்றபோது, சுதந்திரம் பெற்ற ஸ்பானியர்களும், போர்த்துக்கீசர்களும், மதத்துவேஷத்தினுல் இஸ்லாமியப் பண்பாட்டின் சின்னங்களாக எவையென்று இருந்தனவே அவற்றையெல்லாம் அழித்தொழித்தனர். ''ஒரு நூற்ருண்டுக்குள் ஸ்பானியர்கள் ஸ்தாபித்த பேரரசு வீழ்வதற்கு, நாட்டுக்கு உயிர்கொடுத்து வந்த முஸ்லிம் கலா வல்லுநர்கள் வெளியேற்றப்பட்டது தான் காரணம்'' என்கின்றனர் ஐரோப்பிய வரலாற்ருசிரியர்கள். ஸ்பெயினை ஓர் அழகிய பூங்காவனமாக்கினர் முஸ்லிம்கள். ஆனுல் அதே ஸ்பெயினை ஒரு பாலைவனமாக மாற்றினர் ஸ்பானியர்கள்.

பதின்மூன்ரும் நூற்ருண்டில், முஸ்லிம் சமுதாயத்தையே பாதிக்கக்கூடிய பெரும் விபத்தொன்று முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது. கி. பி. 1258ம் ஆண்டில் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைப் பீடமான பாக்தாத் நகரம், மங்கோலிய வெறியர்களால் அழிக்கப்பட்டது. அரும்பெரும் நூல்களெல்லாம் தீக்கிரையாக்கப்பட்டன. ஐந்து நூற்றுண்டுகளாக முஸ்லிம்கள் சேகரித்த இலக்கிய விஞ்ஞானக் களஞ்சியங்கள் அனைத்தும் உலகிற்குப் பயன்படாமல் ஒழிக்கப்பட்டன. அரண்மனைகள், பள்ளிவாசல்கள் எல்லாம் தீக்கிரையாக்கப்பட்டோ, இடித்து நொறுக்கப்பட்டோ தரைமட்டமாக்கப்பட்டன. கண்ட, கண்ட இடங்களில் முஸ்லிம்கள் கொலை வெறியர்களால் கொல்லப்பட்டனர். இந்தக் கொலைவெறியாட்டத்தை மூன்று நாட்களாகப் பாக்தாத் நகரில் மங்கோலியர் தொடர்ந்து நடாத்தினர். மங்கோலியர் பாக்தாத்தில் மட்டுமல்ல இஸ்லாமிய நாடுகள் யாவும் சென்று அழிக்கும் வேலையில் ஈடுபட்டனர்.

இஸ்லாமிய நாகரிகம் என்ற ஒளி விளக்கு ஒரு வெறிக்கூட்டத்தினரின் அட்டகாசத்தினுல் அணைக்கப்பட்டது.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. அரபு மொழியும், இஸ்லாமிய பண்பாடும்.

இஸ்லாமிய சாம்ராஜ்யம் ஐரோப்பாவிலிருந்து மத்திய ஆசியாவரைக்கும் பரந்து விரிந்து மகோன்னதமடைந்திருந்த காலத்தில் அதனோடு ஒட்டி வளர்ந்தது ஒரு நாகரிகமும். அதுதான் இஸ்லாமிய நாகரிகம். அரேபிய நாகரிகமாக ஆரம்பித்து இஸ்லாமிய நாகரிகமாகப் பரிணமித்தது.

அநாகரிக இருளினால் கவியப்பெற்று அராஜக அடக்குமுறை ஆட்சியினால் அல்லலுற்று கொந்தளிக்கும் கடலில் அகப்பட்டவர்களைப்போல் தத்தளித்த ஐரோப்பிய மக்களுக்குக் கலங்கரை விளக்கம் போல் திகழ்ந்தது இஸ்லாமிய நாகரிகம். ஒரு புதிய உலகம் உருவாவதற்குக் காரணமாயிருந்ததும் இவ்விஸ்லாமிய நாகரிகமே. பண்டைய நாகரிகங்களாக கிரேக்க, உரோம நாகரிகங்கள் வடதிசையிலிருந்து வந்த காட்டு மிராண்டிகளின் சூறையாடலினால் அணைந்து மறைந்து போக இருந்த காலத்திற்றான், இஸ்லாமிய நாகரிகம் என்ற புதுத்தீபம் தோன்றி பண்டைய நாகரிகத் தணலின்மேல் அரேபிய இஸ்லாமிய கலாச்சாரப் பண்புகளாகிய விறகுகளை அடுக்கி இஸ்லாமிய நாகரிகமாக சுடர்விட்டு எரியத் தொடங்கியது.

அரேபிய நாகரிகம் என்று ஆரம்பத்தில் பெயரெடுத்த இந்நாகரிகம் தொடக்கத்தில் அரேபிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களால் உருவாக்கப்பட்டதென்றாலும் அதன் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் அரேபியர்கள் மட்டும் காரணகர்த்தர்கள் அல்லர். உலகமெங்கும் அநாகரிக இருளில் மூழ்கிக்கிடந்தபோது பண்டைய நாகரிகங்களாகத் திகழ்ந்த எகிப்திய, பாபிலோனிய, பாரசீக நாகரிகங்கள் வளர்ந்த நிலப்பரப்பில் தான் அரேபிய சாம்ராஜ்யம் தனது வெற்றிக் கொடியை நாட்டியது. இப்பண்டைய நாகரிகங்களுக்கு அரேபிய-இஸ்லாம் என்ற பண்பாட்டு மெருகைக்கொடுத்து புதிய முறையில் ஒரு நாகரிகத்தை வளர்த்தனர் அரேபியர்கள்.

அரேபிய சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த பலதரப்பட்ட மக்களின் ஒன்றுபட்ட சேர்க்கையினுல் எழுந்த நாகரிகமே இந்த நாகரிகம். தம்முள் வேறுபட்ட பண்பாட்டு முறையைக் கடைப்பிடித்து வந்த பல்வேறுபட்ட மக்களாகிய அரேபியர்கள், எகிப்தியர்கள் பாரசீகர்கள் போன்றவர்கள் இஸ்லாம் என்ற ஒரு வட்டத்துக்குள் வந்ததும், தம்மிடையே இருந்த வேறுபாடுகளைத் தவிர்த்து ஒற்றுமைகளைப் பேணி இஸ்லாமிய நாகரிகம் என்ற புதிய நாகரிகத்திற்கு அத்திவாரம் இட்டு வளர்த்தனர். இஸ்லாமிய தத்துவம் என்ற அத்திவாரத்தின் மீது எழுதப்பட்ட அரேபிய, எகிப்திய, பாரசீகப் பண்பாட்டு வேலைப்பாடமைந்த கட்டிடமே இஸ்லாமிய நாகரிகம். இஸ்லாமிய நாகரிகத்தின் பிரதி பிம்பமாக அமைந்தது அரபுமொழி. ஐரோப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவிலும் மற்றைய நாடுகளிலும் தோன்றிய மறு மலர்ச்சி இயக்கத்திற்கும், இதனால் உருவாகிய நவீன உலக நாகரிகத்திற்கும் காரணமாயிருந்தது அரபு மொழியும் அதோடு வளர்ந்த கலாச்சாரமுமே. உலக நாகரிகத்திற்கு முஸ்லீம்கள் ஆற்றிய சேவை இதுதான்.

செமித்திக் மொழிகளுள் வளமையும், சிறப்பும் வாய்ந்த மொழி அரபு மொழி. இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன் அரேபியர்கள் அநாகரிக வாழ்வு வாழ்ந்து வந்தனர். எந்தவித கலாச்சார அமைதியையும் அவர்கள் பின்பற்றியதாகத் தெரியவில்லை. அவர்களிடையே பண்பட்ட கொள்கைகளும், கோட்பாடுகளும் இருந்ததாகக் கூட நாம் அறிய முடியவில்லை. ஆனால் அவர்களுடைய மொழி, கற்பனை வளமும், கவிதைச் செறிவும் நிறைந்ததாயிருந்தது. கவிதைக்கேற்ற தாளலயமும், சீர்வரிசையும் பெற்றதாயிருந்தது.

அரேபிய பாலைவனங்களில் மந்தை மேய்த்துத் திரிந்த 'பெடுயின்' மக்களின் அன்றாட வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டின அவர்களுடைய கவிதைகள். அம்மக்களது வாழ்க்கையில் நிகழ்ந்த காதல், போர், களியாட்டம் ஆகியன அவர்களுடைய கவிதைகளில் இடம் பெற்றன.

சாதாரண மந்தை மேய்ப்பவர்களின் மொழியாயிருந்த அரபு மொழி அரேபியர்களின் வெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிஞல் ஒரு சாம்ராஜ்யத்தின் மொழியாக மாறியது. அதோடு ஒரு பெரிய நாகரிகத்தின் மொழியாகவும் பரிமளித்தது. சாம்ராஜ்ய மொழியாக மாறிய அரபு மொழி தனது புதிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக விரிந்து இடங்கொடுத்தது. பிறமொழிகளிலிருந்து வார்த்தைகளையும் சொற்ருெடர்களையும் பெற்று விரிவடைந்தது. அதே சமயத்தில் மொழியின் அகத்திலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. பழைய சொற்களுக்குப் புதிய கருத்துக்களும், மூலச்சொல்லிலிருந்து புதிய சொற்களும் அமைத்து தங்கள் மொழியை வளம்பெறச் செய்தனர் அரேபியர்கள். இப்படி வளம்பெற்ற அரபு மொழி பண்டைய அரேபிய மக்களது வாழ்க்கையிலும், சம்பிரதாயங்களிலும், பண்பாட்டிலும் ஊறிப்போயிருந்தமையால் அரேபிய கலாச்சாரம், மொழியோடு சேர்ந்து வளரத் தொடங்கியது.

இப்படி வளம் பெற்ற அரபு மொழி அரேபியர்களின் கலாச்சாரத்தின் வாகனமாயிருந்ததோடு மட்டுமல்லாமல் அரேபியப் பேரரசு வீழ்ந்த பின்னும், இஸ்லாமியக் கலாச்சாரத்தின் பிரதி பிம்பமாகச் சிறப்புற்று விளங்கியது. அரேபியர்களின் மொழியுடன் அவர்களது இலக்கியமும், இலக்கியக் கருத்துக்களும் பிறமொழி மக்களிடம் பரவின. அரேபிய மொழியின் செல்வாக்கு பிறமொழி மக்களிடம் வேரூன்றியது. அரேபிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியின் செல்வாக்கினுல் கற்பனையையும் கருத்தையும் விட ° ருவமும் வார்த்தை அலங்காரமும் நிறைந்த ஓர் கவிதை இலக்கியம் உருவாகத் தொடங்கியது.

அரேபிய சாம்ராஜ்ய வளர்ச்சியில் ஏற்பட்ட பிரமிக்கத்தக்க அற்புதம் என்னவென்ருல், அரேபிய ஆட்சியாளர்கள் தங்கள் படை பலத்தின் மூலம் அடக்குமுறை ஆட்சியைக் கைக்கொள்ளாமல் தங்கள் மொழி, மதம், கலாச்சாரம் ஆகியவைகளின் மூலம் ஆட்சியை நிலை நாட்டியதே. அரேபியர்கள் அம்மக்களை இஸ்லாமிய சமயத்திலும் அரேபிய கலாச்சாரத்திலும் ஈடுபாடுடையவர்களாக்கினுர்கள். பதினேராம் நூற்ருண்டில் பாரசீகத்திலிருந்து ஸ்பெயின் தேசம் வரை வியாபித்திருந்த சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த மக்களின் அன்ருட வாழ்க்கையில் அரபு மொழி ஒரு முக்கிய இடத்தைப் பெற்றதுமல்லாமல் அன்றைய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் மொழியாகவும் சிறப்புற்றது. கலை, இலக்கியம் போன்ற துறைகளில் அரபு மொழியின் வளர்ச்சி பண்டைய மொழிகளாகிய கிரேக்க, லத்தின், அரமெயிக் மொழிகளை மங்கச் செய்தது.

அரேபிய மொழி ஜனரஞ்சகமான மொழியாக மாறியவுடன் அரேபிய ஆட்சியாளர்களுக்கும் ஆளப்பட்டவர்களுக்குமிடையே இருந்த வேற்றுமையென்ற அகழி மறைந்துவிட்டது. அரேபிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த மக்களெல்லோரும் அரபு மொழியையே பேசும் மூஸ்லிம்களாயிருந்த படியால், தாங்கள் எல்லோரும் ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற இன உணர்ச்சி வளர்ந்தது. இஸ்லாம் சமயத்தைப் பின் பற்றும் அத்தனை பேரும் ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற இன உணர்ச்சி வேரூன்றியது. இந்த அடிப்படையில் வளர்ந்தது தான் இஸ்லாமிய சகோதரத்துவம். நாடு, மொழி, பண்பாடு என்ற வேறுபாடுகள் முஸ் லிம்கள் மத்தியிலிருந்து மறைந்தன. அதே நேரத் தில் அரேபியர் என்ற இனப்பெயர் அரேபிய சாம் ராஜ்ய ஆட்சியாளர்களைக் குறிக்காமல், திரும்பவும் அரேபிய பாலைவனங்களில் மந்தை மேய்ப்பவர்க ளைக் குறிக்கத் தொடங்கியது. அரேபிய சாம்ராஜ் யம் இஸ்லாமிய சாம்ராஜ்யமாக மாறியது.

அரபுமொழி அரேபிய சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த மக்களை மட்டும் பாதிக்கவில்லை. இச்சாம் ராஜ்யத்திற்கு அப்பாலுள்ள மக்களை, முக்கியமாக முஸ்லிம்களின் மொழியையும் பண்பாட்டையும் பெருமளவில் பாதித்தது. இப்படிப் பாதிக்கப்பட்ட மொழிகளில் முக்கியமானவை பாரசீக மொழி, துருக்கிய மொழியாம். அதோடு புதிய மொழிகள் தோன்றுவதற்கும் காரணமாயிருந்தது அரபு மொழி.

உர்தூ, மலாயா, ஸ்வாஹிலி ஆகிய மொழி கள் அரேபிய லிபியைக்கொண்ட புதிய மொழிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி அரேபிய மொழியும் கலாச்சாரமும் இடைக்காலப் பகுதியில் உலகில் வாழ்ந்த பல்வேறு பட்ட மக்களின் மொழிகளையும், கலாச்சாரங்களை யும் பாதித்தது என்பது சரித்திரம் காட்டும் உண்மை. தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்த முஸ்லிம்கள் ஒரு காலத்தில் தமிழை அரபு லிபியில் எழுதினர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. அரேபிய மொழியோடு சேர்ந்து அவர்க ளது கருத்துக்களும், கொள்கைகளும் ஏனைய முஸ் லிம் மக்களைப் பாதித்தது.

பல்வேறுபட்ட மக்களின் சேர்க்கையினுல் அரேபிய கலாச்சாரம் இஸ்லாமிய கலாச்சாரமாக மாறத் தொடங்கியது. ஆனுல் இஸ்லாமிய இலக் கிய வளர்ச்சியில் அரபு மொழியும் அரேபியர்களது கலாச்சாரப் பண்புகளும் முக்கிய இடம் பெற்றன. இலக்கிய சிருஷ்டிகளிலும் அவைகளின் கருப்பொ ருள்களிலும் கூட இந்த செல்வாக்கை நாம் காண லாம்.

உதாரணத்திற்கு பாரசீக இலக்கிய வளர்ச்சியை சிறிது கவனிப்போம். அரேபியர்களின் ஆட்சிக்குக் கீழ்வந்த பாரசீகம் நாளடைவில் முஸ்லிம் நாடாக மாறியது. பாரசீக இலக்கிய வளர்ச்சியில் ஒரு புது அம்சத்தைக் காண்கிறோம். பாரசீக இலக்கியத்தில் அரேபியர்களின் செல்வாக்குமேலோங்கியிருந்தது. பாரசீகக் கவிஞர்கள் அரேபிய மொழியிலேயே தங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் கவிதைகளை இயற்றத் தொடங்கினர். பதி ஞேராம் நூற்ருண்டுக்குப் பிறகு இந்த செல்வாக்கு மறையத் தொடங்குகிறது. பாரசீக முஸ்லிம்கள் தங்கள் பண்டைய மொழியாகிய பாரசீக மொழியின் அடிப்படையில், அரேபிய லிபியைக் கொண்ட ஒரு மொழியை உருவாக்கியதுமல்லாமல் இஸ்லாமிய பாரசீகக் கலாச்சாரம் என்ற ஒரு புதிய கலாச்சாரத்திற்கு வித்தூன்றி வளர்த்தும் வந்தனர். ஆதலால் பாரசீகக் கவிஞர்களால் பதினென்ரும் நூற்ருண்டுக்கு முன் எழுதப்பட்ட கவிதைகளுக்கும் அதற்குப்பின் எழுதப்பட்ட கவிதைகளுக்கும் வேறுபாடுகள் இருப்பதை நாம் காண்கிருேம். அரபு மொழியில் எழுதப்பட்ட பாரசீகக் கவிதைகளுக்கும் அரேபியக் கவிதைகளுக்குமிடையில் சிற்சில வேறுபாடுகள் இருந்தாலும், அவை அரேபியக் கலாச்சார அடிப்படையில் தோன்றியவையாதலால் அதிக ஒற்றுமை இருப்பதைக் காணலாம். பாரசீகக் கவிஞர்களால் அரபு மொழியில் எழுதப்பட்ட கவிதைகளை இன்றும் அரேபியர்கள் போற்றிப் பாதுகாக்கின்றனர். பதினென்ரும் நூற்ருண்டுக்குப் பிறகு பாரசீகக் கவிஞர்களால் பாடப்பெற்ற பாரசீகக் கவிதைகள் முற்றிலும் வேறுபட்டவையாகவே இருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் இவை இஸ்லாமிய-பாரசீகக் கலாச்சார அடிப்படையில் தோன்றியதே.பிற்காலத்தில் தோன்றிய பாரசீக இலக்கியத்தில் உள்ள கற்பனையாளத்தையோ, கவிதை நயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோ நாம் அரேபிய இலக்கியத்திலோ அல்லது அரேபிய மொழியில் எழுதப்பட்ட பாரசீக இலக்கியத்திலோ காணமுடியாது.

இஸ்லாம் வெறும் தத்துவார்த்தமல்ல. வாழ்க்கையின் வழி. மனிதன் எப்படி வாழவேண்டுமென்று வரையறுக்கிறது. அரசியல், சமுதாயம், சட்டம், அறிவு, கலை, இலக்கியம் ஆகிய துறைகளிலெல்லாம் மனிதன் எவ்வாறு செயலாற்ற வேண்டுமென்று அறுதியிட்டுக் கூறுகின்றது. இப்பல்வேறுபட்ட துறைகளையும் பிணைத்து தனது முத்திரையையும் பதிய வைக்கிறது இஸ்லாம். ஒருவன் இஸ்லாம் சமயத்தை சேர்ந்தவன் என்றால் - அவன் இஸ்லாம் மார்க்கத்தில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். வணக்கத்துக்குரிய இறைவன் அல்லாஹ் ஒருவன் என்றும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஆண்டவனின் திருத்தூதர் என்றும் ஒப்புக்கொள்ள வேண்டும். சமுதாயத்திற்கும் கலீபாவுக்கும் இஸ்லாமிய சாம்ராஜ்யத்திற்கும் பணிந்து நடக்கவேண்டும் என்ற நியதிகளும் கடைப்பிடிக்கவேண்டும். இஸ்லாமிய சமயத்தைச் சேர்ந்தவன் இஸ்லாமிய சாம்ராஜ்யத்திலே ஒரு முக்கிய பிரஜையென கணிக்கப்படுகிறான்.

இஸ்லாமிய சாம்ராஜ்யத்திலும் மற்றைய நாடுகளிலும் வாழும் முஸ்லிம்களினது வாழ்க்கையைக் கட்டுப்படுத்த எழுந்தது ஒரு சட்டம். இது தான் ''ஷரியத்'' என்ற சட்டம். குர்ஆனிலிருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களினது ஹதீஸ்களிலிருந்தும் உருவாக்கப்பட்ட சட்ட திட்டங்கள் தான் இந்த ''ஷரிஅத்'' என்ற சட்டம். ''ஷரிஅத்'' தனி மனிதனது வாழ்க்கையை வளப் படுத்தும் வெறும் சட்டமல்ல, சமூகவாழ்விலும் அரசியல் வாழ்விலும் மக்கள் என்ன முறையைக் கடைப் பிடிக்க வேண்டும் என்றும் வரையறுத்துக் கூறுகின்றது. சுருங்கச் சொன்னால் மனிதனும் சமூகமும் எந்த லட்சியத்தை நோக்கி முன்னேறவேண்டும் என்று கூறுகிறது. இஸ்லாமியத் தத்துவத்தின்படி மனிதனது வாழ்க்கைக்குரிய சட்ட திட்டத்தை அமைக்க வல்லமையுடயவன் ஆண்டவன் ஒருவனே. ஆனால், சமூகத்தைப் பொறுத்தவரையில் ஒரு முஸ்லிம் அரசாங்கத்தின் சட்ட திட்டங்களை அனுசரித்தே நடக்க வேண்டும். ஷரிஅத் சட்டம் ஒரு சமூகத்தினது அன்றாட வாழ்க்கை மட்டுமல்ல, அதன் கருத்துக்கள், நம்பிக்கைகள், கொள்கைகள், கோட்பாடுகள் எல்லாவற்றையும் வரையறுக்கிறது. இதுமட்டுமல்ல, பொதுசனச்சட்டம், அரசியல் சட்டம், குற்றவியல் சட்டம் ஆகிய எல்லாத் துறைகளிலும் அதன் செல்வாக்கு இருத்தல் அவசியம். இந்த அடிப்படையில் இஸ்லாமிய நாகரிகத்தில் சட்டம் வளர்ந்தது.

இனி, இஸ்லாமிய சாம்ராஜ்யத்தில் அரசியல் வாழ்வைக் கொஞ்சம் கவனிப்போம். ஷரிஅத் சட்டப்படி ஒரு முஸ்லிம் சமுதாயத்தின் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலீபா. அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். அரசியல், படைத்துறை, மதம் போன்ற எல்லா விவகாரங்களிலும் அவருக்குப் பூரண அதிகாரம் உண்டு. மத சம்பந்தமான விஷயங்களில் கலீபாவுக்கு, இஸ்லாமியத் தத்துவங்களை மாற்றவோ, அல்லது அவைகளுக்கு விளக்கம் கொடுக்கவோ எந்தவித அதிகாரமும் இல்லை. ஷரி அத் சட்டப்படி இஸ்லாத்தில் இஸ்லாமிய சட்டங்களுக்கும் தத்துவங்களுக்கும் விளக்கமும் வியாக்கியானமும் கொடுக்கும் உரிமை, மத அறிவில் சிறந்து விளங்கிய உலமாக்களுக்கு இருந்தது.

நடைமுறையில் இச்சட்டங்கள் அனுஷ்டிக்கப் படவில்லை. படைப்பலம் மிகுந்தவர்களும் அரசியல் சூதாட்டக்காரர்களும் கலீபாவைக் கைப் பொம்மையாக வைத்து இஸ்லாமிய சாம்ராஜ்யத்தில் ஆதிக்கம் செலுத்தினார்கள். பதினோராம் நூற்றாண்டில் இஸ்லாமிய அரசியல் உலகிலே கலீபாவுக்குப் போட்டியாக உருவாகிய ஒரு பதவி தான் ''சுல்தான்'' என்று பெயர் பெற்றது. சட்ட பரிபாலனத்திலும் சில மாற்றங்களைக் காண்கிறோம். இதுவரையில் சட்ட பரிபாலனத்தை நடத்தி வந்தவர்கள் ''காதிகள்'' என்ற உத்தியோகஸ்தர்கள். நாளடைவில் சட்ட பரிபாலனத்தை நீதிஸ்தலங்கள் எடுத்து நடத்தத் தொடங்கின. நடைமுறையில் இப்படி சில முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, இஸ்லாமிய உலகில் வளர்ந்த கலை இலக்கியம், விஞ்ஞானம் ஆகியவைகளைச் சிறிது ஆராய்வோம்.

இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்பே அரேபிய மக்களின் மொழி, கலாச்சாரம் ஆகியவை பிற மொழி மக்களின் செல்வாக்கினுல் வளர்ந்தவை. அரேபிய மக்களின் வாழ்க்கையில் முக்கியமாக அரசியல் பரிபாலனத்தில் பாரசீக கிரேக்க செல்வாக்கையும், சமய வாழ்க்கையில் யூதர்களினதும், சீரியர்களினதும், செல்வாக்கையும், நாம் காணமுடிகிறது. இஸ்லாத்தின் தோற்றத்திற்குப் பிறகு இந்த செல்வாக்கு மறைந்தாலும், அரசியல் சமூக வாழ்க்கையில் பலதரப்பட்ட மக்களது நாகரிகப் பண்புகளின் செல்வாக்கைக் காண்கிறும்.

இஸ்லாமிய நாகரிகத்தின் ஆரம்பகால வளர்ச்சியில் கிரேக்க, உரோம நாகரிகப் பண்புகள் இடம் பெற்றன என்றுல் மிகையாகாது. உதாரணமாக, தத்துவரீதியாக ஆராய்ச்சி செய்தல் பலவித கலைகளில் ஈடுபாடு கொள்ளுதல், விஞ்ஞான கண்ணேட்டத்துடன் பிரச்சினைகளைப் பரிசீலனை செய்தல் ஆகியவை இஸ்லாமிய நாகரிகம் வளர்வதற்குப் பெரிதும் உதவின.

பல்வேறுபட்ட நாகரிகப் பண்புகள் சேர்ந்திருந்த போதிலும் இஸ்லாமிய நாகரிகம் என்ற ஒரு புதிய நாகரிகமும் பண்பாடும் தோன்றியதை யாராலும் மறுக்க முடியாது. இஸ்லாமிய நாகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் என்று வளர்ந்த இந்த நாகரிகம் பண்டைய நாகரிக வளர்ச்சியையும் அவைகளின் பண்புகளையும் தன்னுள்ளடக்கியதாயிருந்தாலும் அவைகளினின்றும் முற்றிலும் வேறுபட்டதாயும் புதியதாயும் விளங்கியது.

இஸ்லாமிய மக்களின் உன்னதமான சாதனைகளுள் முதன்மையாக விளங்குவது அவர்களது இலக்கியச் சிருஷ்டிகளே.

இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பே அரேபிய இலக்கியம் ஓர் உன்னத நிலையிலிருந்தது. அவர்கள் இலக்கியம், சமூக அரசியல் வாழ்வைப் பிரதிபலிப்பதாயிருந்தது. சமூகத்தின் முக்கிய பிரச்சினைகளைத் தனது படைப்புகளில் எடுத்துக் காட்டுவதே ஓர் இலக்கிய கர்த்தாவின் கடமையென்றிருந்தது. இதனுல் அவன் சமூக வாழ்வில் ஒரு முக்கிய இடத்தை வகித்தான். உமய்யா கலீபாக்களின் காலத்தில் இக்கவிதைகளெல்லாம் தொகுக்கப்பெற்றன. அப்பாஸிய கலீபாக்களின் காலத்தில் தான் இஸ்லாமிய இலக்கியம் முக்கியமாகக் கவிதை இலக்கியம் வளம் பெற்றது. அரேபியர்களல்லாத மக்கள் முக்கியமாகக் கவிதை வளம் மிக்க பாரசீக மக்கள் முஸ்லிம்களான பின், இஸ்லாமிய இலக்கியத்தில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. புதிய உத்திகளும், புதிய உருவ அமைதிகளும், புதிய கருக்களும் இலக்கியத்தில் கையாளப்பட்டன. என்ருலும் அன்றைய இலக்கிய உலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய மரபினருக்கும் பழமை விரும்பிகளுக்கு மிடையில் ஏற்பட்ட இலக்கியச் சர்ச்சை காரண மாக புதிய மரபினரின் இலக்கியப் பரிசோதனை கள் தடைப்பட்டன. அரேபிய ஆட்சியாளர்க ளும், சமூக அந்தஸ்திலுள்ளவர்களும் அரேபிய இலக்கிய முறையையே விரும்பியதால் இலக்கியத் தில் பழைய மரபு புதிய உருவத்தைப் பெறத் தொடங்கியது. இந்த இலக்கியத்தைத் தோற்று வித்தவர் ''முத்த நப்பி'' என்பவர். அரேபியர்கள் இவரைத்தான் தங்களது கவிஞர்களுள் சிறந்தவர் என்று கொண்டாடுகின்றனர்.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. இஸ்லாமிய உலகில் வளர்ந்த கலைகள்.

இஸ்லாமிய மக்கள் கலை, விஞ்ஞானம், மருத்துவம் ஆகிய துறைகளில் அடைந்த முன்னேற்றம் அவர்களுடைய கலாச்சாரத்தை மேலும் வலுவுள்ளதாக்கியதுடன், பிற கலாச்சாரங்களைப் பாதிக்கும் அளவுக்குச் செல்வாக்கும் பெற்றது.

முத்த நப்பியினுடைய தோற்றத்திலிருந்து அரேபிய இலக்கியத்தில் ஒரு புது திருப்பத்தைக் காண்கிறோம். புதிய மரபினருக்கும், பழைய மரபினருக்குமிடையில் ஏற்பட்ட இலக்கிய சர்ச்சை காரணமாக அரேபிய இலக்கியம் பழைய மரபின் அடிப்படையிலே, புதிய உருவத்தைக் கொண்டது. இப்புதிய இலக்கியத்தின் தந்தையாக விளங்கியவர் தான் முத்த நப்பி (Mutanafbi) என்பவர்.

அரேபிய இலக்கியத்தில் சிகரமாக அமைவது திருக்குர் ஆன். ஆண்டவனின் திருமறையாகிய திருக்குர்ஆனிலிருக்கும் இலக்கிய அம்சங்களும், இலக்கிய உருவங்களும், உலகில் மனிதனால் ஆக்கப்பட்ட எந்த ஓர் இலக்கியத்திலும் காண முடியாது. மனித இலக்கியங்களெல்லாம் ஒரு காலத்தில் அழியலாம். ஆனால் ஆண்டவனின் இந்த இலக்கிய சிருஷ்டி அழியாமல் காலத்தையும் வென்று நிற்கும் தன்மையுடையது. ஆகவே இந்தத் திருக்குர்ஆன் ஒன்றேபோதும், அரேபிய இலக்கியத்தை உலக இலக்கியங்களில் முதலிடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பதற்கு இஸ்லாமிய நாகரிகத்தின் ஆரம்ப காலத்தில் அரேபிய இலக்கியத்தில், வசன இலக்கியமும், கவிதை இலக்கியமும், புதுப் புது அம்சங்களை பெற்று வளர்ந்தன. கட்டுரை இலக்கியத்தில் சிறந்து விளங்கியவர் அம்ர் - இப்னு - பஹ்ர் (Amr-Ibnu-Bahr) என்பவர். இவர் அல் ஜாஹிஸ் (Al-Jahiz) என்ற சிறப்புப் பெயரையும் கொண்டிருந்தார். ஒரு நீக்ரோ அடிமையின் பேரனாகப் பிறந்த இவர் முன்மாதிரியான தத்துவங்களையும் உத்திகளையும், உருவங்களையும் கைக்கொண்டதனுல் இவருக்கு அரேபிய இலக்கிய வளர்ச்சியில் ஓர் அழியாத இடம் கிடைத்தது. விஞ்ஞானமும், கல்வியும் ஆரம்பத்தில் மத அடிப்படையிலேயே வளர்ந்தன. அரேபிய இலக்கணமும், அகராதியும் திருக்குர்ஆனுக்கு விளக்கம் கொடுப்பதிலும்,வியாக்கியானம் செய்வதிலுமிருந்து வளர்ந்தன. ஒரு மாபெரும் இலக்கணமும், அகராதியும் வளர்வதற்கு, ஆண்டவனின் இலக்கிய சிருஷ்டியாகிய திருக்குர்ஆனில் என்னென்ன வார்த்தைகளும், இலக்கிய வளைவு சுழிவுகளும் இருந்திருக்க வேண்டும்?

மதீனுவில் வாழ்ந்த முஸ்லிம்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளைப் பின்பற்றி முதன் முதல் முஸ்லிம்களானவர்களானபடியால்- அவர்கள் இஸ்லாமிய இலக்கியத்தை மத அடிப்படையிலே வளர்த்தனர். குர்ஆனுக்கு விளக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தல், இஸ்லாமிய தத்துவங்களுக்கு வியாக்கியானம் செய்தல், இஸ்லாமிய சட்ட திட்டங்களை வகுத்தல் போன்ற இஸ்லாமிய சமுதாயத்தின் வளர்ச்சிக்குத் தேவையானவைகளில் ஈடுபட்டு, இஸ்லாமிய கலாச்சாரத்திற்கு அத்திவாரம் இட்டனர். அதோடு அவர்கள் இஸ்லாமிய சமுதாயத்தின் சம்பிரதாயங்களையும், கோட்பாடுகளையும் கோர்வை செய்தனர். இஸ்லாமிய சட்டங்களும், இஸ்லாமிய வரலாறும் வளர்வதற்கு இவர்கள் பண்டைய இஸ்லாமிய சமுதாயத்தின் கோட்பாடுகளையும், சம்பிரதாயங்களையும் கோர்வை செய்தது தான் காரணமாயிருந்தது என்றால் மிகையாகாது. இப்படி வளர்ந்த இஸ்லாமிய சட்டம்தான் ஷரிஅத் என்று பெயர் பெற்றது. இஸ்லாமிய வரலாறு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து தோன்றி, பண்டைய அரேபியர்களின் மரபு வழக்குகளையும் சேர்த்து வளர்ந்து, பாரசீக சாம்ராஜ்யத்தில் வளர்ந்து வந்த கால வரையறைக் கோவைகளைப் பின்பற்றி, இஸ்லாமிய வரலாறாக பிரமாண்டமான உருவத்தைப் பெற்றது. அரேபியர்களிடம் வரலாற்றுணர்ச்சி அபரிமிதமாக இருந்தபடியால் வெகு சீக்கிரத்திலேயே அவர்கள் சிறந்த வரலாற்று நூல்களை பிறப்பிக்கத் தொடங்கினர். சர்வதேச வரலாறு, சாம்ராஜ்ய வரலாறு, நகர நாட்டுவரலாறு, குல வரலாறு, குடும்ப வரலாறு என்று பல பிரிவுகளாக இஸ்லாமிய வரலாறு வளர்ந்தது. அரேபியர்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் ஆரம்பகால வரலாற்று நூல்கள் பெரும்பாலும், அவர்களுடைய மரபு வழக்கங்களை-சம்பிரதாயங்களைக்-கோர்வை செய்த மூல முதல் நூல்களாகவே இருந்தன. சாதாரண நாடோடிக் கதைகளிலிருந்தும், சமுதாயத்தின் சம்பிரதாயங்களிலிருந்தும், கோட்பாடுகளிலிருந்தும், தோன்றிய வரலாற்றுக் கோவைகளாகிய முதல் நூல்கள்தான் பிற்காலத்தில் 'இஸ்லாமிய வரலாறு' என்று அதி உன்னதமான வரலாற்று இலக்கியமாகப் பரிணமித்தது. 'அல் முக்கத்திமா' என்ற பெயரில் உருவாகிய இஸ்லாமிய வரலாற்று நூல் இவ் வளர்ச்சியின் உச்சி முகடாகத்திகழ்ந்தது. இதன் ஆசிரியராகிய இப்னுசுல்தான் இஸ்லாமிய வரலாற்றிலேயே சிறந்த வரலாற்றாசிரியராகத் திகழ்ந்தார். பிற்காலத்தில் ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள் வரலாற்றுத்துறையில் புதுப்புதுத் தத்துவங்களை உருவாக்குவதற்கு அடியெடுத்துக் கொடுத்தவரும் இவரே. இவருடைய நூல்களிலிருந்து பெற்ற தத்துவங்களுக்கு இயற்பொருள் வாதம் என்ற மெருகு பூசி, ஐரோப்பிய வரலாற்றிலிருந்து மேற்கோள்களைக் காட்டி 'மேற்கு நாடுகளின் வரலாற்றுத்தத்துவங்கள்' என்ற புதுப் பெயர்களைக் கொடுத்து, சிறப்புப் பெற்றனர் ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள். இப்னு கல்தான் என்ற இஸ்லாமிய வரலாற்றாசிரியரிடமிருந்து களவாடியதை உலகுக்கு மறைத்துவிட்டனர் இவ்வரலாற்றாசிரியர்கள். இடைக்காலத்திய உலக வரலாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிலேயே சிறந்த சிந்தனையாளராகத்திகழ்ந்த இப்னு சல்தான் இப்படி வஞ்சகமாக மறைக்கப்பட்பட்டார்.

இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சிக்குத் தூண்டுகோலாயிருந்தது கிரேக்க நாகரிகம் என்பதை யாராலும் மறக்கமுடியாது. இஸ்லாமிய நாகரிகத்தின் ஆரம்பகாலத்தில் கிரேக்க நாகரிகத்தின் செல்வாக்கைக் காண்கிறோம். விஞ்ஞானத் துறையின் வளர்ச்சியிலும், தத்துவ சாஸ்திரத்திலும், கிரேக்க கருத்துக்கள் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றன. கணக்கியல், வான சாஸ்திரம், பூகோள சாஸ்திரம், மருத்துவம் மற்றும் ஏனைய விஞ்ஞானத் துறைகளிலும் கிரேக்கர்களின் செல்வாக்கை நாம் காணலாம். ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளில் இஸ்லாமிய உலகிலே ஏற்பட்ட கல்வி வளர்ச்சிக்கு, கிரேக்க நூல்களின் மொழி பெயர்ப்புக்கள் ஒரு புதிய உத்வேகத்தையும், உற்சாகத்தையும் அளித்தது என்றால் மிகையாகாது. உமய்யா கலீபாக்களின் காலத்திற்றான் இந்த மொழி பெயர்ப்பு இலக்கியம் தொடங்கியது. சில கிரேக்க இயைபியல் நூல்கள் ஆரம்பத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. இரண்டாவது உமருடைய காலத்தில் பஸ்ரா நகரில் வாழ்ந்த மாசர் ஜவாஹி என்ற யூதனால் சீரிய மொழியிலிருந்த சில மருத்துவ நூல்கள் அரேபிய மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டன. அரேபிய மருத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்வதற்கு இம்மொழி பெயர்ப்பு நூல்கள் பெரிதும் உதவின. உமய்யா கலீபாக்களின் காலத்தில் இம்மொழி பெயர்ப்புகள் தனிப்பட்ட முறையிலும், சிதறலான முறையிலும் நடந்தன. அப்பாசிய கலீபாக்களின் காலத்தில் தான் இம்மொழி பெயர்ப்பு இலக்கியம் ஒரு திட்டத்துடன் வளர்ந்தது எனலாம். இம்மொழி பெயர்ப்பு இலக்கியம் வளர்வதற்கு அப்பாசிய கலீபாக்கள் கொடுத்த ஆதரவும் ஊக்கமும்தான் காரணம். ஒன்பதாம் நூற்ருண்டில் அரசாண்ட மாமூன் என்ற கலீபாவின் காலத்திற்ருன் இந்த மொழிபெயர்ப்பு இலக்கியம் சிறந்த நிலையை அடைந்தது. மொழி பெயர்ப்பாளர்களை உருவாக்குவதற்கு ஒரு கல்லூரியையும் அமைத்து, அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு ஆசிரியர்களையும் நியமித்து, அவர்களுக்கு வேண்டிய ஒரு வாசிகசாலையையும் நிர்மானித்துக் கொடுத்து, மொழி பெயர்ப்பு இலக்கியத்தை வளர்த்த பெருமை கலீபா மாமூனையே சாரும். கிரேக்க, சீரிய மொழிகளிலிருந்த இயக்க நூல்களையும், வானசாஸ்திர நூல்களையும், கணக்கியல் நூல்களையும் அரேபிய மொழிக்கு மொழிபெயர்த்தனர் இம்மொழி பெயர்ப்பாளர்கள். இம்மொழி பெயர்ப்பாளர்களுள் சிறந்து விளங்கியவர் **ஹுனைன் இப்னு இஷாக்** (Hunain Ibn Ishaq) என்பவர். இவர்கள் எல்லாத்துறைகளிலிருந்தும் நூல்களை மொழிபெயர்த்து அரேபிய இலக்கியத்தை வளம்பெறச்செய்தனர். பழைய நூல்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிக் கொணர்வதற்கு நாலாதிசைகளுக்கும் ஆட்களை அனுப்பினர் கலீபாக்கள். அறிவுப்பசியால் உந்தப்பட்ட இவர்கள் எதிரிகளின் நாடுகளுக்குக் கூடத் தங்கள் தூதுவர்களை அனுப்பத்தயங்கவில்லை. ஆரம்பத்தில் இம்மொழி பெயர்ப்பாளர்கள் கிரேக்க நூல்களை மொழிபெயர்ப்பதுடன், தங்கள் சொந்த படைப்புக்களான விளக்கவுரை நூல்களையும், சுருக்க நூல்களையும், படைத்தனர். மொழி பெயர்ப்பு இலக்கியமாக ஆரம்பித்த இவ்விலக்கியம் வெகுசீக்கிரத்தில் தழுவல் இலக்கியமாக மாறியது. கிரேக்க, சீரிய, கொப்டிக் மொழிகளிலிருந்த முதல் நூல்களைத் தழுவி அரேபிய் மொழியில் அரேபிய மரபுக்கேற்றபடி, நூல்களை உருவாக்கினர். தழுவல் இலக்கியம் விரைவில் சிருஷ்டி இலக்கியமாக மாறுகிறது. இத்தலைமுறையில் சிறந்த சிருஷ்டிகர்த்தாக்கள் தோன்றினார்கள். இவர்களில் பெரும்பாலனவர்கள் பாரசீகர்கள். இப்னு சீனா, அல்-பிரூனி, ராஸி போன்ற சிறந்த சிந்தனையாளர்கள் தோன்றியது இந்தக் காலகட்டத்தில்தான். இவர்கள் வெறும் தத்துவ சாஸ்திரத்துடன் மாத்திரம் நிற்கவில்லை. பிற துறைகளிலும் மேம்பட்டு விளங்கினார்கள். ராஸி மருத்துவத்திலும், இப்னு சீனா, மருத்துவத்திலும், தத்துவ சாஸ்திரத்திலும், அல் பிரூனி மருத்துவம், வான சாஸ்திரம், கணக்கியல், இயக்க நூல், இயைபியல், பூமி சாஸ்திரம், சரித்திரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கினார்கள். இஸ்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிய உலகிலே வாழ்ந்த சிந்தனையாளர்களுள் எல்லாம் சிறந்து விளங்கியவர் அல் பிரூனி என்பவர். இஸ்லாமிய இலக்கிய உலகிலே ஏக சக்கிராதிபத்தியம் வகித்துவந்தவரும் இவரே. கிரேக்கர்களின் கையில் வெறும் தத்துவமாக விளங்கிய மருத்துவ சாஸ்திரம் முஸ்லிம்களால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. நூல்களின் பக்கங்களில் உறங்கிக்கிடந்த இம்மருத்துவ சாஸ்திரம், அரேபியர் காலத்தில் அன்றுட வாழ்க்கையில் ஏற்படும் வியாதிகளைக் குணப்படுத்த உதவியது. வியாதிகளைக் குணப்படுத்த பரீட்சை செய்த முஸ்லிம்கள் மருத்துவ சாஸ்திரம் வளர்வதற்குத் தங்கள் பரீட்சைகளின் முடிவுகளையும், அனுபவத்தில் ஏற்பட்ட அறிவையும், குறித்துவைத்தனர். இதனுல் மருத்துவ சாஸ்திரம் முன்னைவிட பன்மடங்கு வளர்ந்தது. கணக்கியல் சாஸ்திரம் கிரேக்க உரோம காலங்களில் வளர்ச்சியடையவில்லை. கணித சாஸ்திரம் உரோம சாம்ராஜ்யத்தின் காலத்தில் வளர்ச்சியடைந்தாலும், சில காரணங்களினுல் அதன் முன்னேற்றம் தடைப்பட்டது. மேற்கு நாடுகளில் கணித சாஸ்திரம் வளர்வதற்கு அரேபியர்கள் தான் காரணம். அரேபியர்கள் தங்கள் கணக்குகளில் உபயோகித்த சைபர், கணித சாஸ்திரம் வளர்வதற்குப் பெரிதும் உதவியது. இந்த சைபர் என்ற எண் முதலில் இந்தியாவில் தான் தோன்றியது என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்தியாவுடன் வர்த்தகம் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த அரபியர்கள் இந்தியமக்களிடமிருந்து கணித சாஸ்திர நுணுக்கங்களைப் படித்து ஐரோப்பியர்களுக்குக் கொடுத்தனர் என்பது சில வரலாற்ருசிரியர்கள் கருத்து. இக்கூற்றை நாம் உண்மையெனக் கொண்டாலும் கணித சாஸ்திரத்திலிருந்து மற்றும் பிரிவுகளான, குறிக்கணக்கியல் (Algebra) நிலக்கணக்கியல் (Geometry) முக்கோண இயல் (Trigeometry) ஆகியவை வளர்வதற்கு அரேபியர்கள் தான் காரணம் என்பது மட்டும் உண்மை.

தத்துவ சாஸ்திரத்திலும் ஆரம்பத்தில் கிரேக்கர்களுடைய செல்வாக்கைத்தான் நாம் காண்கிருேம். பண்டைய அரேபிய தத்துவ சாஸ்திரத்தை கிரேக்க தத்துவ சாஸ்திரிகளான பிளேட்டோ, அரிஸ்டோட்டல் போன்றவர்களின் தத்துவங்கள் பெரிதும் பாதித்தன. ஆரம்பத்தில் அரேபிய தத்துவ சாஸ்திரம் கிரேக்க தத்துவ சாஸ்திரத்தையொட்டி வளர்ந்ததென்ருலும், நாம் இலக்கியத் துறையில் கண்டதைப்போல, தத்துவ சாஸ்திரத்திலும் ஒரு திருப்பத்தைக் காண்கிருேம். அரிஸ்டோட்டலின் தத்துவத்தின் செல்வாக்கென்றும் நிழலில் வளர்ந்த அரேபிய தத்துவ சாஸ்திரம். இந் நிழலினின்றும் விடுபட்டு இஸ்லாம் என்ற சூரிய வெளிச்சத்தில் கிளைவிட்டு வளரத்தொடங்கியது. இஸ்லாமிய தத்துவ சாஸ்திரம் பிறந்துவிட்டது. இஸ்லாமிய அடிப்படையிலேயே வளர்ந்த இத்தத்துவ சாஸ்திரம், நாளடைவில் விஞ்ஞானக் கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணோட்டத்துடன் வளர்ந்து 'இஸ்லாமிய தத்துவ சாஸ்திரம்' என்ற பெயரைப் பெற்றது. இந்தப் புதிய மரபில் தோன்றிய தத்துவ சாஸ்திரிகளில் சிறந்து விளங்கியவர்கள் கிந்தி, ஃபாராபி, இப்னு சீனு, இப்னு ரஷ்த் ஆகியவர்கள். இஸ்லாமிய தத்துவ சாஸ்திரம் பிற்காலத்தில் தோன்றிய தத்துவ சாஸ்திரங்களைப் பெருமளவில் பாதித்தது.

இஸ்லாமிய உலகம் இவ்வகையாக உலக நாகரிக வளர்ச்சிக்குத் தனது தொண்டை ஆற்றிற்று. நாகரிகம் என்ற விளக்கு அணைந்துவிடும் தறுவாயில் இருந்தபோது இஸ்லாமிய உலகம் அவ்விளக்கிற்கு எண்ணெயாய் அமைந்து அது அணையாவண்ணம் பாதுகாத்து, இன்னும் பன்மடங்கு ஒளியுடன் பிரகாசிக்கச் செய்து, பிற்கால சந்ததியினருக்குக் கொடுத்தது. பண்டைய நாகரிகங்களுக்கும், பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றிய புதிய நாகரிகத்திற்கும் ஒரு பாலம்போல் அமைந்தது இஸ்லாமிய நாகரிகம். மனித முன்னேற்றத்திற்கு முஸ்லிம்கள் ஆற்றியசேவை, இதுவரையில் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வந்தது. இஸ்லாமிய உலகிலே இன்று ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சி ஒரு புதிய உலகம் உருவாவதற்கு உதவும் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். ஆங்கில இலக்கியத்தின் பிதாமகரான பர்னுட்ஷாவும் வரலாற்று மேதையான ரேயின் பீயும் 'எதிர்கால உலகத்தை உய்ய வைக்கும் பொறுப்பு இஸ்லாத்தில் தங்கி இருக்கிறது' என்ற கருத்தைத் தெரிவித்திருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. இஸ்லாமிய கலாச்சாரத்தின் தோற்றம்.

இரேக்க உரோம நாகரிகங்களுக்குப் பிறகு பதினைந்தாம் நூற்றாண்டிலே ஐரோப்பிய உலகிலே ஏற்பட்ட மறுமலர்ச்சி இயக்கம் வரையிலுமுள்ள காலப்பகுதி வரலாற்றாசிரியர்களால் 'இருண்ட சகாப்தம்' என்று கூறப்படுகிறது. ஐந்தாம் நூற்றாண்டுக்கும் பதினைந்தாம் நூற்றாண்டுக்குமிடையே உள்ள இக்காலப் பகுதியை நாம் ஐரோப்பாவைப் பொறுத்தவரையில் இருண்ட சகாப்தம் என்றே கொள்ளலாம். இது உண்மையும்கூட. ஆயிரம் வருடங்களாக அஞ்ஞான இருளிலே மூழ்கிக்கிடந்த மக்கள் தாமாகவே ஒருநாள் ஞானம் பெற்றனர் என்பது நம்பமுடியாதது மட்டுமல்ல வரலாற்றுக்கும் ஒவ்வாதது. ஆகவே, ஒன்று இவர்கள் பதினைந்தாம் நூற்றாண்டுக்கு முன்பே அறிவுத் துறையில் உன்னத நிலையையடைந்திருக்க வேண்டும். அல்லது பதினைந்தாம் நூற்றாண்டில் இவர்களிடையே மறுமலர்ச்சி இயக்கம் தோன்றும் அளவிற்கு இவர்களுக்கு அறிவை ஊட்டியிருக்க வேண்டும் வேறொரு இனத்தவர். முன்னையது வரலாற்றுக்கு முரண்பட்டதாகையால் பின்னையதைத் தான் நாம் சரியென்றுகொள்ளவேண்டும். யார் இந்த வேற்று இனத்தவர்? என்ற கேள்வி எழுகிறது. பண்டைய நாகரிகங்களின் வளர்ச்சி உலகுக்குப் பயன்படாமல் போய்விடுமோ என்று அஞ்சிய நிலையில்தான் அவைகளைப் பாதுகாத்துப் பிற்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்ததியினருக்குக் கொடுத்தனர் இந்த இனத்தவர். இம்மாபெரும் சேவையைச் செய்தவர்கள் முஸ்லிம்கள்.

மேற்கு நாடுகளின் பண்பாடு, கிழக்கு நாடுகளின் பண்பாடு என்று உலக பண்பாட்டை நாம் பொதுவாகப் பிரிக்கிறோம். மேற்கு நாடுகளுக்கும், கிழக்கு நாடுகளுக்குமிடையே சில முக்கிய வேறுபாடுகள் இருக்கின்றன என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். கிழக்கு நாடுகளில் தோன்றிய நாகரிகங்கள் மனிதனது ஆத்மீக வாழ்க்கையை வளர்த்தன என்றும், மேற்கு நாடுகளில் தோன்றிய நாகரிகங்கள் லோகாயத வாழ்க்கையை வலியுறுத்தின என்றும் வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். இந்த அடிப்படை வேறுபாடுகளுக்குக் காரணம் பண்டைய நாகரிகத்தின் பண்புகளில் சிலவற்றை கிழக்கு நாடுகளும், வேறு சிலவற்றை மேற்கு நாடுகளும் மரபுரிமையாகப் பெற்றன என்பதே பண்டைய கிரேக்க நாகரிகத்தின் கலைப்பண்பை மேற்கு நாடுகளும், அதன் தத்துவப்பண்பை கிழக்கு நாடுகளும் பரபுரிமையாகக் கொண்டன என்பது வரலாற்றாசிரியர்களிடத்தே நிலவிவரும் ஒரு கருத்து. இதனாற்றான் இவ்விரு பகுதி நாட்டு மக்களிடையே பண்பாட்டு முறையில் அதிக வேறுபாடு இருக்கிறது என்பதும் ஒப்புக்கொள்ளப் பட்ட ஒரு கருத்து. இக்கருத்து ஓரளவு உண்மையாக இருக்கலாம். ஆனால் இதை முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையென்று நாம் கொள்ளமுடியாது. கிரேக்க உரோம நாகரிகத்தின் கலைப்பண்பைப் பாதுகாத்து அதற்கு மெருகு பூசி, அதன் கலைவளத்தை உயர்த்தி புதிய உருவில் மேற்கு நாடுகளுக்கு மட்டுமல்ல, கிழக்கு நாடுகளுக்கும் கொடுத்த பெருமை முஸ்லிம்களையே சாரும்.

மனித உருவத்தை ஓவியமாகவும், சிலையாகவும் செய்வதை இஸ்லாம் கண்டிக்கிறது. ஆகையால் ஓவியக் கலையும், சிற்பக் கலையும் இஸ்லாமிய உலகிலே புதிய உருவத்தைப் பெற்றன. சாதாரண மனித புலன்களுக்கு அப்பாற்பட்ட கற்பனையுலகிலேயே வளரக்கூடிய கலையாக உருவெடுத்தது. அழகழகான வண்ணங்கள் தீட்டப்பெற்ற ஓவிய வடிவங்களாகப் பிறந்தன.

இஸ்லாமிய கலைகளின் வளர்ச்சியில் பாரசீக-சீன கலைப் பண்புகளின் செல்வாக்கைக் காண்கிறோம். இவ்வழகுக் கலைகளின் வளர்ச்சியில் இஸ்லாமிய நாகரிகத்தின் தனித்தன்மையையும், அதே நேரத்தில், பிறருடைய நற்பண்புகளைப் பிரித்தெடுத்து ஸ்வீகரித்துக் கொள்ளும் தன்மையையும் காண்கிறோம். பிறநாட்டு மக்களின் கலாச்சாரப் பண்புகள், இஸ்லாமிய பண்பாட்டு வளர்ச்சியைப் பாதித்தது என்றாலும், இப்பண்புகளை தன்னுள்ளடக்கி இஸ்லாமியப் பண்புகள் நிறைந்த ஒரு புதிய பண்பாட்டு முறையை உருவாக்கும் திறமை முஸ்லிம்களுக்கு உண்டு என்பது வரலாறு கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை. உமய்யா கலீபாக்களின் மாளிகைகளிலுள்ள ஓவியங்களைக் கவனிக்கும்போது, ஆரம்பத்தில் அரேபியர் பிறநாட்டு மக்களின் கலைகளைப் பயின்றனர் என்பது தெரியவருகின்றது. ஆனால், அப்பாசிய கலீபாக்களின் செல்வாக்கு ஓங்கியிருந்த ஈராக் தேசத்திலுள்ள கலைச் சின்னங்களைப் பார்க்கும்போது, இவைகளில் ஒரு தனித்தன்மையும் அரேபியர்களின் செல்வாக்கும் இருப்பதைக் காண்கிறோம். இஸ்லாமியக் கலை என்று சொல்லுமளவிற்கு இக்கலைகள் வளர்ந்து ஒரு புது உருவத்தைக் கொடுத்தன.

கிரேக்க நாகரிகப் பண்புகளின் செல்வாக்கு அதிகரித்த காலத்தில் இஸ்லாமிய தத்துவத்தின் அடிப்படையில் வளர்ந்த கருத்துக்களுக்கும், கிரேக்க நாகரிகத்தின் அடிப்படையில் தோன்றிய கருத்துக்களுக்குமிடையே மோதல் ஏற்படுவதைக் காண்கிறோம். இவ்விரு கருத்துக்களின் மோதலினால் இஸ்லாமிய கலாச்சாரம் முன்னைவிடப் பன்மடங்கு பெருகி வளம்பெற்றது. இவ்விரு கருத்துக்களைக்கொண்ட இலக்கியக் கர்த்தாக்கள் தனித்தும், சில சமயங்களில் ஒன்று சேர்ந்தும் இஸ்லாமிய இலக்கியத்தை வளர்த்தனர். இஸ்லாமிய இலக்கிய உலகிலே இக்கருத்துக்களின் மோதலினால் ஏற்பட்ட இலக்கிய வளர்ச்சி, மனித வரலாற்றிற்கு என்றும் அழியாத சேவையை ஆற்றியது.

இப்போராட்டத்தில் இஸ்லாமிய தத்துவத்தின் அடிப்படையில் தோன்றிய கருத்துக்களே முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் வெற்றி பெற்றன. சமுதாயத்தின் பழக்கங்களுக்கும், கோட்பாடுகளுக்கும் இலக்கணம் வகுக்கும் இஸ்லாம். தனது அடிப்படைத் தத்துவங்களை எதிர்க்கும் எந்த ஒரு கருத்தையும் விலக்கத் தவறவில்லை. இஸ்லாமிய தத்துவத்திற்கு மாறாக இல்லாத எந்த ஒரு கருத்தையும், கொள்கையையும் இஸ்லாமிய சமுதாயம் ஏற்றுக்கொள்ள பின்வாங்கியதில்லை. மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய எந்த ஒரு கருத்தையும், இஸ்லாமிய வாழ்க்கைக்கு ஏற்ற முறையில் மாற்றி அதற்கு ஒரு புது உருவத்தைக் கொடுக்கவும் முஸ்லிம்கள் பின் தங்கியதில்லை. ஆகவே இஸ்லாமிய நாகரிகத்தில் இஸ்லாமிய தத்துவங்களையும், கருத்துக்களையும் கொண்ட இஸ்லாமிய கலாச்சாரம் வளர்ந்தது.

ஒரு குறிப்பிட்ட மக்களைப் பற்றியோ அல்லது சமுதாயத்தைப் பற்றியோ நாம் ஆராய்ச்சி செய்யும் போது, அம்மக்களின் குணாதிசயங்களைப் பற்றியும், அவர்களின் தனிப்பட்ட இயல்புகளைப் பற்றியும் நாம் அறியத் தலைப்படுகிறோம். மறைந்து போன ஒரு நாகரிகத்தின் மக்களைப்பற்றி அறிவதற்கு நாம் அவர்களது இலக்கியச் சாதனைகளையும், வரலாற்று நூல்களையும் ஆதாரமாகக்கொள்ள வேண்டும். இந்தமுறையில், உலக நாகரிகத்திற்கு வாழ்வளித்த இஸ்லாமிய மக்களின் தனிப்பட்ட இயல்புகளைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தக் கலாச்சாரப் பண்பையும் தன்வயப் படுத்திக் கொள்ளும் இயல்பை நாம் அரேபிய மக்களிடம் காணமுடிகிறது. ஐரோப்பாவில் பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளுக்கும், ஆசியாவில் சீனு, இந்தியா ஆகிய நாடுகளுக்குமிடையிலுள்ள பரந்த நிலபரப்பு முதன் முதலாக ஒரு தனி ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது அரேபியர்களின் காலத்தில் தான். மொழியாலும், இனத்தாலும், பண்பாட்டு முறையாலும் வேறுபட்ட பலதரப்பட்ட மக்கள் முதற் தடவையாக ஒரு குறிப்பிட்ட மொழியையும், பண்பாட்டு முறையையும் கடைப்பிடிக்கும் ஆட்சியின் கீழ் வந்தனர். கிரேக்க, ரோம ஆட்சியாளர்கள் ஒரே தன்மையையுடைய கலாச்சார விதிகளைக்கொண்ட மக்களையே ஆண்டனர். அவர்களுடைய சாம்ராஜ்யங்கள் பெரும்பாலும் மேற்குநாடுகளைக் கொண்டதாகவே இருந்தன. வரலாற்றில் முதன் முறையாக, ஸ்பானிய கிறிஸ்தவர்களும், வட ஆபிரிக்க முஸ்லிம்களும், அரேபியர்களும், மத்திய கிழக்கு ஆசியமக்களும், சிந்துவெளிப் பிரதேச இந்துக்களும், ஒரே ஆட்சியின் கீழ் வந்தது இஸ்லாமிய சாம்ராஜ்ய காலத்தில் தான். ஒன்றுக்கொன்று முரண்பட்ட கலாச்சாரங்களாகிய கிரேக்க, ரோம கலாச்சாரத்தையும், பாரசீக-இந்திய கலாச்சாரத்தையும், ஓர் ஆட்சியின் கீழ் கொண்டுவந்து அந்த முரண்பாட்டில், இரண்டையும் இணைத்ததும் ஒரு புதிய தத்துவத்தைக்கொண்டதுமான கலாச்சாரத்தைத் தோற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தனர் முஸ்லிம்கள். அரேபிய-இஸ்லாம் என்ற அஸ்திவாரத்தில் எழுப்பப்பட்ட இந்தக் கலாச்சாரம், இஸ்லாமிய சாம்ராஜ்யத்திலே வாழ்ந்த பல் வேறுபட்ட மக்களின் கலாச்சாரப் பண்புகளைத் தன்னுள்ளடக்கி, இஸ்லாமிய கலாச்சாரம் என்று சொல்லும்படியான ஒரு புதிய கலாச்சாரத்தைத் தோற்றுவித்தனர்.

இனத்தாலும், மொழியாலும், மதத்தாலும் வேறுபட்ட மக்கள் வாழும் இஸ்லாமிய உலகிலே, இன்னொரு முக்கிய அம்சத்தைக் காண்கிறோம். அதுதான் முஸ்லிம் ஆட்சியாளர்களின் பரந்த மனப்பான்மை.

இஸ்லாமிய சமயம் வாள் முனையில் பரப்பப்பட்டது என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. இதற்கு நேர்மாறாக இஸ்லாம், முஸ்லிம்களின் ஆத்ம பலத்தாலும், அன்பினாலுமே பரவிற்று. முஸ்லிம்கள் தங்கள் மதத்தில் வைத்த நம்பிக்கையும், கடைப்பிடித்து வந்த வாழ்க்கை முறையும் தான் வேற்று மதத்தவரை இஸ்லாமிய மதத்திற்கு ஈர்ப்பதற்குரிய காரணம். உண்மையான மார்க்கத்தைப் பின் பற்றுதவர்களுக்கு ஆண்டவனின் சந்நிதானத்தில் நீதி வழங்கப்படும் என்ற நம்பிக்கையும் பிறமதத்தவரைப் பொறுமையுடன் பாது காப்பதற்குக் காரணமாயிருக்கலாம். அன்றைய முஸ்லிம் பல மதத்தவர் வாழும் ஒரு சாம்ராஜ்யத்திலே முதன்மை ஸ்தானத்தோடு மாத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்தியடைந்திருக்கலாம். தன்னுடைய ஆதிக்கத்தையும், சமூக அந்தஸ்தையும் நிலைநாட்டுவதற்கு அவன், பிற மதத்தவர்மேல் சில சமூக-சட்டவிதிகளை சுமத்தியிருக்கலாம். இந்த ஒரு குறையைத் தவிர பிற மதத்தவருக்கு, இஸ்லாமிய உலகிலே, சமயத்துறையிலும், பொருளாதாரத் துறையிலும் எந்தவிதக் கட்டுப்பாடும் இருக்கவில்லை. இஸ்லாமிய நாகரிக வளர்ச்சியில் பங்கு கொள்ளுவதற்கு அவர்களுக்கு எல்லாவித வாய்ப்புக்களும் இருந்தன.

வரலாற்றில் இடைக்காலத்தில் தோன்றிய இஸ்லாமிய நாகரிகத்தில் அளவுகடந்த ஈடுபாடும், அதன் உயர்ந்த தன்மையில் நம்பிக்கையும் வைத்திருந்தனர் முஸ்லிம்கள். ஆண்டவனால் அருளப்பட்ட திருமறைகளில் கடைசியானதும் சிறந்ததுமான புர்கான் (*Furkan*) வேதம். சிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கும் என்பதில் நம்பிக்கை வைத்திருந்தனர் முஸ்லிம்கள். இதற்கு முன்தோன்றிய வேதங்களை மக்கள் சரியாகக் கடைப்பிடிக்காததினால், அவர்களுடைய சமூக வளர்ச்சியில் குறைபாடுகள் இருந்தது என்றும், எந்தவித குறைபாடுகளுமில்லாத ஒரு நிறைவுள்ள சமுதாயத்தை இஸ்லாம் தோற்றுவிக்கும் என்றும் அன்றைய முஸ்லிம்கள் நம்பியிருந்தனர். முன்னைய நாகரிகங்களிலிருந்த குறைபாடுகள் நீங்கப்பெற்று, ஒரு நிறைவுள்ள சமுதாயமாக இஸ்லாமிய சமுதாயம் பரிண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்கும் என்ற எண்ணமும் முஸ்லிம்களிடையே வலுத்திருந்தது. ஆண்டவனுல், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூலம் அருளப்பட்ட திருக்குர் ஆனில் விஸ்வாசம் வைத்த முஸ்லிம்கள், ஒரு புதிய உலகத்தையே உருவாக்குவது தங்கள் கடமை யென்று எண்ணினர். இதனுற்ருன் நாலாதிசைக ளுக்கும் சென்று தங்கள் மதத்தைப் பரப்ப முயன் றனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்திலேயே இஸ்லாம் நாலாதிசைகளிலும் பர வியது. நாளுக்கு நாள் விரிவடைந்து வரும் ஒரு சமுதாயத்தின் வெற்றிச் சின்னமாகவும் அமைந் தது இஸ்லாம். முஸ்லிம்கள் ஆரம்பத்திலிருந்தே அடைந்த வெற்றிகள் தங்களின்மேல் ஆண்டவ னின் அனுக்கிரகம் இருக்கிறது என்ற எண்ணத் தை ஊர்ஜிதப்படுத்துவதாய் இருந்தது. ஆண்ட வனின் அருளினுற்ருன் தாங்கள் இம்மாபெரும் சாம்ராஜ்யத்தை இவ்வளவு கூடிய சீக்கிரத்தில் உருவாக்க முடிந்தது என்ற கருத்தும் அன்றைய முஸ்லிம் ஆட்சியாளர்களிடையே வேரூன்றியிருந் தது. ஆதலால், ஆண்டவனின் சட்டப்படிதான் இச்சாம்ராஜ்யம் இயங்கவேண்டும் என்றும் அவர் கள் திட்டமிட்டனர். பிற மதத்தவரிடமிருந்து முஸ்லிம்கள் எதையும் கற்கலாம். ஆனுல் இஸ்லா மிய ஷரி அத் படி தான் தங்கள் வாழ்க்கை முறை யை அமைக்கவேண்டும் என்றும் சட்டம் வகுத்த னர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய நாகரிகத்திலே இன்னும் ஓர் அம்சம் என்னவென்றால் இங்கே தனி மனித வாதத்திற்கு இடமில்லையென்பதே. கூட்டு முறை வாழ்க்கையைத்தான் நாம் இங்கே காண்கிறோம். இதற்கு ஒரு சிறந்த உதாரணம்-ஒரு நூலாசிரியன் தன்னுடைய நூலை சமர்ப்பிக்கும்போது, அதைத் தனது சொந்த சிருஷ்டியாகக்காட்டாமல், வாழையடி வாழையாக வந்த இலக்கியக்கர்த்தாக்களின் முயற்சியின் சின்னமாகவே அதை அர்ப்பணிக்கிறான். தனது சொந்த மேதாவிலாசத்தை மறைத்துக் கொண்டு பரம்பரை பரம்பரையாக இலக்கிய மேதாவிகள் செய்துவந்த சோதனைகளின் சாதனையாகவே தனது நூலைச் சமர்ப்பிக்கிறான், ஒரு நூலாசிரியன். இஸ்லாமிய கவிதையில் கூட இந்த அம்சத்தை நாம் காண்கிறோம். சாதாரணமாக கவிதை ஒரு கவிஞனின் உள்ளத்து உணர்ச்சிகளையே வெளிப்படுத்தும். இஸ்லாமிய கவிதை இலக்கியத்தில் நாம் தனிமனிதப் பண்பை காணமுடியாது. இஸ்லாமிய கவிதை இலக்கியத்தில், ஒரு கவிஞனின் உள்ளுணர்சிக்குப் பதிலாக, சமுதாயத்திலுள்ள வெடிப்புகளின் பாளங்களைத்தான் காண்கிறோம். இவ்விலக்கியத்தில் புதுமையுணர்ச்சியை நாம் காணமுடியாது. யதார்த்தத்தைத்தான் காண்கிறோம். *(Romanticism)* என்ற புதுமையுணர்ச்சிக்குப் பதிலாக *Socialist Realism* என்ற யதார்த்த இலக்கியத்தைத்தான் காண்கிறோம். தனி மனித வாதத்தைவிட இந்தக் கூட்டுறவுப் பண்பு இஸ்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிய இலக்கியத்தில் மட்டுமல்ல, இஸ்லாமிய கருத்துக்களிலும், தத்துவங்களிலும், அதன் கோட்பாடுகளிலும் நாம் காணமுடிகிறது. ஒவ்வொரு முஸ்லிமும் பூரணத்துவமுள்ள (*Perfect*) மனிதத்தன்மையையும், அரசியல் முறையையும் தனது வாழ்வின் லட்சியமாகக் கொள்ளவேண்டும். இந்த லட்சியத்தை அவன் தனித்த முறையில் அடையாமல், கூட்டுறவு முயற்சியால் அடைய முயலவேண்டும். சமுதாயத்துடன் ஒன்றிப் பழகி, சமூக விதிகளுக்குக் கட்டுப்பட்டு, சமூகத்தோடு தானும் ஒருவனாய்ச் சேர்ந்து இந்த லட்சியத்தை அடைய முயலவேண்டும். இதனாற்றான், ஒரு முஸ்லிம் தொழுகையில்கூட மற்றவர்களுடன் சேர்ந்து தொழவேண்டும் என்று இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இஸ்லாம் எவ்வளவு தூரம் சமுதாய ஒற்றுமையை வற்புறுத்துகின்றது என்பது இதிலிருந்தே தெரிகிறது.

இவ்வளவு மேன்மையுற்றிருந்த இஸ்லாமிய சமுதாயம் பிற்காலத்தில் நலிவுற்று நசிந்ததற்கு இவர்கள் கொண்ட கருத்துக்களும், கொள்கைகளும் வேறுபட்டதே காரணம். எதையும் கற்று ஆராய்ச்சி செய்யும் தன்மையுடைய முஸ்லிம்கள் பிற்காலத்தில் தோன்றிய சித்தாந்தக் கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டு, அறியாமைக் குட்டையில் தேங்கிக் கிடந்தனர். அப்பாசீய கலீபாக்களின் காலத்தில் வெள்ளப்பெருக்கெடுத்து ஓடிய இஸ்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிய இலக்கியம், பிற்காலத்தில் சூபித்துவக் கொள்கைகளால் பாதிக்கப்பட்டு குளங்களிலும், குட்டைகளிலும் தேங்கிக்கிடந்தது. சுதந்திர ஆராய்ச்சி மறைந்து எதையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை எப்பொழுது முஸ்லிம்களிடம் வந்ததோ அன்றே இஸ்லாமிய சமுதாயத்தின் வீழ்ச்சிக்கு அடி கோலியாகிவிட்டது. ஒரு பொருளின் காரணத்துவத்தை அறியவேண்டும் என்ற அவா முஸ்லிம்களிடையேயிருந்து மறைந்ததோ அன்றே இஸ்லாமிய கலை, இலக்கியம், விஞ்ஞானம், தத்துவ சாஸ்திரம், நாகரிகம், கலாச்சாரம் - எல்லாமே அடங்கி ஒடுங்கி ஸ்தம்பித்து நின்றன. உலக நாகரிக வளர்ச்சியில் இஸ்லாமிய சமுதாயம் பின்னிற்கத் தொடங்கியது. ஒரு சாம்ராஜ்யத்தையே ஆதிக்கம் செலுத்திய மக்கள் பிறநாட்டவருக்கு அடிமைகளாக வாழத் தொடங்கினர். பொருளாதாரத் துறையிலும், வியாபாரத்துறையிலும், முன்வரிசையில் நின்ற முஸ்லிம்கள் பிரபுத்துவ ஆட்சிமுறையென்னும் இருளறைக்குள் குற்றுயிராய்க் கிடந்தனர். அடங்கி, ஒடுங்கிப்போய் முடங்கிக் கிடந்த முஸ்லிம்கள் திரும்பவும் வீறுபெற்று எழுவதற்கு ஓராயிரம் வருஷங்கள் செல்லவேண்டியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. இஸ்லாமிய கலாச்சாரத்தின் அம்சங்கள்.

கலாச்சாரம் என்ற வார்த்தை கலை-ஆசாரம் என்ற கூட்டுச் சொற்களிலிருந்து வந்திருக்கலாம். ஆங்கில மொழியின் கல்ச்சர் (*Culture*) என்ற வார்த்தையின் நேரடி மொழி பெயர்ப்பாகவும் இது இருக்கலாம் என்று எண்ணவும் இடமிருக்கிறது. தமிழ் மரபுக்கேற்ப இதை **'பண்பாடு'** என்றும் ஒருசிலர் கூறுவதுண்டு. நாகரீக வாழ்க்கை வாழ்ந்துவரும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்புகளை ஒரு தொகுப்பாகக் குறிப்பிடுவதற்கு உபயோகிக்கப்படுவதுதான் இந்தப் பண்பாடு என்ற வார்த்தை.

**கலாச்சாரம்** 'பண்பாடு' என்ற வார்த்தைகள் இவை எல்லோராலும் சர்வசாதாரணமாகப் பாவிக்கப்பட்டு வருகின்றன. இவ்வார்த்தைகளைப் பாவிக்கும் போது அநேகம் பேர் இவைகளின் பொருள் உணராமலேயே பாவிக்கின்றனர். அநேகம் பேர் **'கலாச்சாரம்'** என்ற வார்த்தையை நாகரிகத்தைக் குறிப்பிடுவதற்கு உபயோகிக்கின்றனர். இது தவறு. கலாச்சாரம் என்பது பண்பட்ட ஒரு மன நிலையின் நோக்கு அல்லது ஒருவித மனப்போக்காகும். மனப்பக்குவம் என்றும் நாம் இதைக் கொள்ளலாம்.

ஒரு மனிதன் ஆண்டவனின் படைப்பைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தும், அப்படைப்பில் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகிக்கும் இடமும், வாழ்க்கையின் லட்சியம் பற்றிய அவனது கொள்கையும், இன்ப துன்பங்களைப் பற்றிய அவனது எண்ணமும், அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களினால் உண்டாகும் மனப்பக்குவமும் - இவை எல்லாவற்றினதும் தொகுப்புதான் கலாச்சாரம் என்ற பதத்தின் அடிப்படைக் கருத்து.

இவ்வகையான மன நோக்கமும் வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்கள் பற்றிய எண்ணமும், அறிவியல் பால்வருகின்ற மனப்பக்குவத்தின் பிரதிபலிப்பே என்று கூறினால் மிகையாகாது. இவைகளைப்பற்றிய எண்ணம் வலுப்பெற்று எதிரான கருத்துக்களையும் தாங்கவல்ல ஒருவித பக்குவ நிலையை அடைந்த மனம் நம்பிக்கை என்ற பற்றுக் கோட்டுக்கு வித்தூன்றுகிறது. இந்நம்பிக்கையின் பால் எழுந்தவைகளே உலகில் உள்ள எல்லா சமயங்களும். இந்நம்பிக்கை ஒருவித மெய்யுணர்வுமில்லாமல் ஒரு கொள்கையிலோ, தத்துவத்திலோ அளவுக்கு மீறிய ஈடுபாடு கொண்டிருத்தல் என்று பொருளல்ல. எக்காலத்துக்கும் எவ்விடத்துக்கும் பொருந்தக்கூடிய ஓர் உண்மையில் ஈடுபாடுவைத்திருத்தல் தான் இந்த நம்பிக்கை.

உலகத்தைப்பற்றிய ஒருவனது மனநோக்கு தான் கலாச்சாரத்தின் அடிப்படைத் தத்துவம். உலக நிலையில் மாறுதல்கள் ஏற்படலாம். சாம்ராஜ்யங்கள் தோன்றி மறையலாம். சமூகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து மடியலாம். ஆனால் இந்த மனநோக்கு அல்லது மனநிலை உலகத்தின் ஏற்றத்தாழ்வுக் கேற்றவாறு மாறக்கூடாது. ஆயிரம் வருடங்களுக்கு மேலாக உலகத்தையே ஆட்சிசெய்த ரோம் சாம் ராஜ்யத்தின் சக்கரவர்த்திகள் தாங்கள் கடவுள் தன்மை எய்துவிட்டதாக இறுமாப்பு அடைந்து தங்களை மக்கள் வணங்கவேண்டுமென்று வற்புறுத் தினாலும், இப்படிப்பட்ட நிலைகளால் மருளாது தனது சத்தியத்தினின்றும் பிறழாமல் நிற்கும் மனப்பக்குவத்தைத்தான் நாம் கலாச்சார நோக்கு என்கிறோம். வான மண்டலத்தை எய்துவிட்ட காரணத்தினால் ஆண்டவனையும் வென்றுவிட் டோம் என்ற மனப்பாங்கு இஸ்லாமிய கலாச் சாரத்தின் பாற்பட்டது.

கலாச்சாரம் நாகரிக வளர்ச்சியுடனோ, சமூ கங்களின் முன்னேற்றத்துடனோ ஒட்டி வளர்வ தில்லை. அதி உன்னத நிலையிலிருக்கும் நாகரிகங் கள் கலாச்சாரத்தில் தாழ்ந்த நிலையிலிருக்கலாம். அதேநேரத்தில் நாகரிகப்படியில் அடியிலிருக்கும் சமூகங்கள் கலாச்சாரத்தில் உச்ச ஸ்தானத்தில் இருக்கலாம். தென்னாபிரிக்க சமுதாயத்தையோ அல்லது அமெரிக்க ஆங்கில சமுதாயங்களையோ நாம் நாகரிகமற்றவை என்று கூறமுடியாது. இருந் தாலும் இப்பண்பட்ட சமுதாயங்களில் தான் கருப்பு நிறமுடையவர்கள் அநியாயமாக வதைக் கப்படுகிறார்கள். இந்த மனநிலையிலிருக்கும் மக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நாம் பண்பாட்டில் மேன்மையுற்றவர்கள் என்று கொள்ள முடியாதல்லவா? ஆகவே ஒரு மன நிலையின் அடிப்படையில் தோன்றும் எண்ணங்கள் தான் ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை நிர்ணயிக்கக் கூடியவை.

கலாச்சாரத்நிற்கும் நாகரிகத்திற்குமுள்ள வேறுபாட்டை நாம் உணர்ந்தால் தான் இந்தக் கலாச்சாரத்தைப் பற்றிய உண்மையை அறியமுடியும். நாகரிகம் ஒரு சமுதாயத்தின் பருப்பொருள் சாதனைகளைக் குறிக்கிறது. கலாச்சாரம் அச்சமுதாயத்தின் மனப்பக்குவத்தைக் குறிக்கிறது. இது தான் நாகரிகத்திற்கும் கலாச்சாரத்திற்குமுள்ள வித்தியாசம்.

கலாச்சார அமைப்பில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் வெளிப் பண்புகளையும் அச்சமுதாயத்தின் மன எழுச்சிகளையும் நாம் மறந்துவிடக் கூடாது. சமூக பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், நடையுடைபாவனைகள், கொள்கைகள், கோட்பாடுகள், லட்சியங்கள் ஆகியனவும் கலாச்சார வட்டத்திற்குள் அடங்கும்.

இஸ்லாமிய கலாச்சாரம் என்று சொல்லும் போது நாம் இஸ்லாத்தில் நம்பிக்கைவைத்த ஒரு முஸ்லிமின் மன நிலையையும் இஸ்லாமிய தத்துவங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் அவன் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துத் தனது வாழ்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையை அமைக்கிறான் என்பதையே குறிக்கிறோம். இஸ்லாமிய கலாச்சாரம் ஒரு குறிப்பிட்ட சமுகத்திற்கு மாத்திரம் பெருத்தமுடையது என்று கொள்ளலாகாது. அது மனித குலத்தையே பண்படுத்தும் தன்மையுள்ளது. ஓர் இஸ்லாமிய சமுதாயத்தில் அடக்கு முறையும், அநீதியும் நிலவும் வரையில் அச்சமுதாயம் எவ்வளவு தான் இலக்கியம் கலை ஆகியவைகளில் முன்னேறினாலும் அது இஸ்லாமிய கலாச்சாரத்தின் அடிப்படையில் ஒழுகி நடக்கிறது என்று கூறமுடியாது. ஆகவே இஸ்லாமிய கலாச்சார அமைப்பிற்கு வெளிப்பண்புகளை விட உட்பண்புகள் தான் அவசியம்.

சாம்ராஜ்யங்கள் ஸ்தாபிப்பது யுத்தங்களில் வெற்றி பெறுவது இஸ்லாத்தின் லட்சியம் என்று கூறமுடியாது. இஸ்லாத்தின் லட்சியம் மகோன்னதமானது. மனித சமுதாயத்தின் ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் தான் இஸ்லாம் லட்சியமாகக் கொண்டிருக்கிறது. சமுதாய வளர்ச்சிக்குப் பின் தனிமனிதனது வளர்ச்சிக்கும் இஸ்லாம் ஊக்கமளிக்கிறது. இதனாற்றான் இஸ்லாத்தின் கலாச்சார சாதனைகள் ஈடு இணையற்றதாய் விளங்குகின்றன. மேல் நாட்டு கலாச்சாரங்களைப் போலல்லாமல் இஸ்லாமிய கலாச்சாரத்தில் கலைகள் அழகுக்காகவும் மனிதனது இன்பத்துக்காகவும் வளர்க்கப்பட்டனவேயல்லாமல் அவைகளை வைத்து 'பூஜை செய்வதற்கோ, அவைகளுக்குத் தெய்வீகத்தன்மை கொடுத்து ஆத்மாவையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமையாக்குவதற்கோ கலைகள் வளரவில்லை. மனித வாழ்வின் உன்னத லட்சியம் இதுதான் என்று இஸ்லாம் இக்கலைகளைப் போற்றவில்லை. இஸ்லாமிய கோட்பாட்டின்படி இக்கலைகள் மனிதனுக்குத் திருப்தியையும் மன இன்பத்தையும் கொடுக்குமே யல்லாது மனிதனது ஆத்மீகத்தை வளர்க்காது.

இஸ்லாமிய கலாச்சாரம் என்று சொல்லும் போது மனித சமுதாயத்தின் நல்வாழ்வுக்காகவும் மேன்மைக்காகவும் தோன்றிய ஒரு மதத்தின் அடிப்படையில் தோன்றிய ஒருவித மனப்பக்குவ நிலையையே குறிக்கிறோம். மனிதனது நல்வாழ்வுக்கும் முன்னேற்றத்திற்கும் இஸ்லாம் வழிவகுக்கிறது. இஸ்லாமிய அடிப்படையில் முன்னேறினால் தான் மனித சமுதாயம் சுபிட்சமடையும் என்பது இஸ்லாமிய தத்துவங்களில் ஒன்று.

இஸ்லாமிய கோட்பாட்டிற்கு விரோதமாக எந்த ஒரு பண்பும் ஒரு இஸ்லாமிய சமுதாயத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றதோ அச்சமுதாயம் இஸ்லாமிய கலாச்சாரத்தினின்றும் தவறி நடக்கிறது என்றே கொள்ளவேண்டும். அச்சமூகம் தானே தன்னுடைய சீரழிவைத் தேடிக்கொள்கிறது.

இடம், காலம், இனம், மொழி, நிறம் ஆகிய வேறுபாடுகளையெல்லாம் கடந்து நிற்பதுதான் இஸ்லாமிய கலாச்சாரம். இஸ்லாத்தின் அடிப்படைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவங்களில் நம்பிக்கைவைத்து அதன்படி ஒழுகு தலேயே இஸ்லாம் வற்புறுத்துகிறது இஸ்லாமிய தத்துவங்களுக்கு முரணுக எந்த ஒரு முஸ்லிமும் நடக்கக்கூடாது என்பது இஸ்லாத்தின் கட்டுப் பாடுகளில் ஒன்று. இது தவிர இஸ்லாத்தில் சொல் லப்படாத பிற விஷயங்களே அவரவர்க்கு ஏற்ற முறையில் அவரவரின் எண்ணப்பிரகாரம் நடப்ப தற்கு இஸ்லாம் இடம் கொடுக்கிறது. ஒரு நாக ரிகத்தின் வெளிப்பண்புகள் கால ஓட்டத்திஞல் தோன்றியவை. ஆகவே இப்பண்புகள் காலகதியில் மாறக்கூடியவை. ஆஞல் ஓர் அடிப்படைக் கருத்து அப்படியல்ல. அது காலத்தால் சாகாதது.

இஸ்லாமிய தத்துவங்கள் காலத்தையும் வென்று நிற்கும் தன்மையுடையன. ஆகவே உல கில் வாழும் பல்வேறுபட்ட முஸ்லிம் சமூகங்களின் வெளிப் பண்புகளில் வேறுபாடுகள் இருந்தாலும் அவையெல்லாம் இஸ்லாமிய வாழ்க்கை நெறியில் ஒன்றுபட்டவையாகவே விளங்குகின்றன. ஆகவே காலம் இம் முஸ்லிம் சமூகங்களின் வெளிப் பண்பு களில் மாறுதல்களே ஏற்படுத்திஞலும் இஸ்லாமிய தத்துவங்களின் பால் இவை ஒழுகி நடப்பதஞல், காலத்தையும் வென்று நிற்கும் ஒருமைப்பாடு இச் சமூகங்களுக்கு இருக்கிறது என்ருல் அது மிகைப் படக்கூறியதாயிருக்காது.

உதாரணமாக இஸ்லாம் உடையைப் பற்றிக் கூறும்போது ஒருவன் தனது கொப்புள்ளிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழங்கால் வரையிலுமுள்ள பகுதியை மூடி மறைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. ஒரு பெண் தனது முகத்தையும் உள்ளங் கைகளையும் தவிர உடம்பின் மற்ற எல்லா பாகங் களையும் மூடி மறைத்துக் கொள்ளவேண்டும் என்று இஸ்லாம் வற்புறுத்துகிறது. உடலை மறைக்கும்போது பிறருடைய கவனத்தை ஈர்க் கும் அளவுக்கு உடல் வளைவுகள் தெரியக்கூடிய தாக இறுகக் கட்டக்கூடாது. ஒரு பெண்ணிடம் அவசியமாக இருக்கவேண்டிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய குணங்கள் பாதுகாக் கும்படியாக அமைந்திருக்கின்றன. இஸ்லாமிய தத் துவங்கள் ஒரு பெண்ணின் கற்பைக் காப்பாற்று முகமாக அமைந்தன இவ்வாடைகள். வெவ்வேறு முஸ்லிம் சமுகங்களில் வெவ்வேறு விதமாக இவை அமைந்தாலும் இவை இஸ்லாமிய வாழ்க்கைக்கு முரணாக அமையவில்லை. காலகதியில் ஒரு சிறு மாறு தல்கள் ஏற்பட்டாலும் இவை இஸ்லாமிய கோட் பாடுகளுடன் ஒட்டியே வளர்ந்திருக்கின்றன.

இதே அடிப்படையில் வளர்ந்ததுதான் மொழியும். ஓர் உண்மை முஸ்லிமுக்கு எல்லா வற்றையும் விட தனது மதம்தான் முக்கியம். அவனுடைய சொல்லும் செயலும் மதத்தின் பாற்பட்டதாயிருக்கவேண்டும். அவனுடைய கருத் துக்களும் எண்ணங்களும் இஸ்லாமிய தத்துவங் களுக்கு விளக்கம் கொடுப்பதாயும் அமைய வேண்டும். ஒரு முஸ்லிமுக்கு மொழியைவிட மதந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் முக்கியம். ஆனால் தான் சொல்லும் போது அவன் தனக்குஇலகுவாயிருக்கும்மொழியில் சொன்னால் தான் அவனும் பிறரும் பயனடைய முடியும். ஆகவே ஒரு முஸ்லிம் எந்த ஒரு மொழியையும் தன்வயப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் உடையவனாயிருக்க வேண்டும். எந்த ஒரு மொழியும் அவனுக்கு வேண்டாததாயிருக்கக் கூடாது. அவனது ஒரே குறிக்கோள் தான் சொல்லும் கருத்து எவ்வளவு தூரம் இஸ்லாத்தைப் பரப்புவதற்கு உதவுகின்றது, எவ்வளவு தூரம் முஸ்லிம்களுக்குப் பயன்படப்போகின்றது என்பதாயிருக்க வேண்டும்.

இஸ்லாம் தோன்றுவதற்குமுன் அரேபியர்கள் சிலை வணக்கத்தில் ஈடுபட்டிருந்தமையால் இஸ்லாம் சிலைவணக்கத்தைத் திரும்பவும் தூண்டிவிடக் கூடிய கலைகளை வளர்ப்பதை அனுமதிக்கவில்லை. அதனாற்றான் இஸ்லாமிய நாகரிக வளர்ச்சியில் நாம் சிலைகளையும், கலை உருவங்களின் வளர்ச்சியையும் காணமுடியவில்லை.

மனிதனது வாழ்க்கைக்குத் துணையான கருவிகளை அழகு படுத்துவதை இஸ்லாம் லட்சியமாகக் கொள்ளவில்லை. மனிதனது ஆத்மாவைப் பண்படுத்தி அழகுசெய்து உன்னத நிலைக்குக்கொண்டு வருவதையே இஸ்லாம் தனது லட்சியமாகக்கொண்டிருக்கிறது. மேற்கு நாட்டவர்கள் ஒரு சமுதாயத்தில் பெரும்பான்மையினர் இழி நிலையிலிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிட்டாலும் சிறுபான்மையினர் மட்டும் கலைக ளில் வல்லுனர்களாக இருந்தால் அச்சமூகம் பண் பாட்டின் உச்சநிலையிலிருக்கின்றனர் என்று கருது கின்றனர். இந்தவகையான கருத்தை இஸ்லாம் அனுமதிக்காது. இஸ்லாமிய தத்துவத்தின்படி மனி தனது உயிர் மிகவும் உன்னதமானது. மனித சமு தாயமே ஆத்மீக வளர்ச்சி பெறவேண்டுமென்பது இஸ்லாமிய கோட்பாடுகளில் ஒன்று.

சமீபத்தில் இங்கிலாந்தின் பத்திரிகைகளில் ஒரு விவாதம் நடந்தது. விவாதத்திற்குரிய பிரச் சினை இதுதான்-மிகவும் விலையுயர்ந்ததும் கிடைக்க முடியாததுமான பண்டைய கிரேக்க நாட்டுச் சிலை யொன்றும் ஒரு குழந்தையும் ஒரு அறையில் இருக் கின்றன. இந்த அறையில் தீப்பிடிக்கிறது. இரண் டில் ஒன்றைத்தான் காப்பாற்ற முடியும். இந்த நிலையில் எதைக்காப்பாற்றவேண்டும். இதுதான் பிரச்சினை. விவாதத்தில் பெரும்பாலோர் சிலை யைத்தான் காப்பாற்ற வேண்டுமென்றூர்கள். ஏனென்றூல் சிலை அழிந்துபோனூல் அதேபோன்று இன்னெரு சிலையைப்பெறமுடியாது. லட்சக் கணக்கான குழந்தைகள் ஒவ்வொருநாளும் பிறந்து கொண்டே இருக்கின்றன. ஆகையால் குழந்தை யைக் காப்பாற்ற வேண்டியது அவசியமில்லை என்று விவாதித்தார்கள். இவ்வகையான கருத்து இஸ்லாமிய தத்துவத்திற்கு முரணுனது. ஆண்ட வன் படைப்பிலே சிரேஷ்டமானவன் மனிதன். மனிதனது உயிர் உலகிலுள்ள எல்லாவற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட மிக உன்னதமானது. மனித உயிர் ஒன்று அநியாயமாக மடிவதை இஸ்லாம் அனுமதிக்காது. இந்த நவீன முறையான சிலை வணக்கத்திற்கு இஸ்லாத்தில் இடமில்லை.

கலைகளில் ஒரு முக்கிய அம்சமான சிற்பம் இஸ்லாமிய நாகரிக உலகில் வளரத்தான் செய்தது. ஒரு குறிப்பிட்ட சிற்பவடிவத்தைத் தான் முஸ்லிம்கள் போற்றிவளர்க்க வேண்டுமென்றில்லை. இதனால் இஸ்லாமிய உலகிலே, சிற்பம் வேறு எந்த சிற்ப வடிவத்தையும் பற்றி நிற்காமல் சுதந்திரமாக வளரத் தொடங்கியது. இதே சுதந்திரம் தான் பிற கலாச்சார கலைகளைப் பயில ஊக்கமளித்தது. கிரேக்க, ரோம கலைகளைப் பயின்று இஸ்லாமிய வாழ்க்கைக்கு ஏற்றமுறையில் அவைகளை மாற்றி வளர்த்து வந்தார்கள் முஸ்லிம்கள். ஆரம்பத்தில் பிற நாகரிக மக்களினது கலைகளின் உதவியால் வளர்ந்த இக்கலை நாளடைவில் தனி உருவம் பெற்று இஸ்லாமியக் கலை என்று சொல்லுமளவிற்கு முதிர்ச்சியடைந்தது. இஸ்லாமிய ஓவியம், இஸ்லாமியக் கலை, இஸ்லாமிய சிற்பம் என்று இவை இஸ்லாமிய அடிப்படையில், ஒருவித தனித்துவத்தோடு வளர்ந்தாலும் இவைகளைப் பூஜிக்கும் அளவிற்கு முஸ்லிம்கள் இஸ்லாமிய நெறியினின்றும் வழிதவறவில்லை. இக்கலைக் கட்டங்களை அழகு சாதனைகளாகக் கணித்தார்களேயொழிய அவைகளைத் தெய்வீகத் தன்மைவாய்ந்த புனித ஸ்தலங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாகப்போற்றி வணங்கவில்லை. இறந்தவர்களின் கல்லறைக்கூடங்களைத் தெய்வீகத்தன்மை பொருந்திய வணக்க ஸ்தலங்களாகக் கொள்வது இஸ்லாமிய தத்துவத்திற்கு முரணானது. கல்லறைக்கூடங்களை இந்த நோக்கத்துடன் கட்டுவதை இஸ்லாம் அனுமதிக்காது. மேலும் இக்கட்டடங்களை தங்கத்தாலும், வெள்ளியினாலும் முலாம் பூசி தங்க ஆபரணங்களை இவைகளில் வைப்பதும் இஸ்லாமிய கோட்பாட்டிற்கு ஒவ்வாது.

ஆண்டவனைத்தவிர வேறு எதனிலும் அதிக ஈடுபாடுவைப்பது இஸ்லாமிய தத்துவத்திற்கு முரணானது.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. இஸ்லாமிய கலாச்சாரத்தின் அடிப்படைத் தத்துவம்.

மனித வாழ்வின் முன்னேற்றத்திற்காகத் தோன்றிய மதம் தான் இஸ்லாம். மனிதனின் அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தைப் பற்றியும் இஸ்லாம் கூறுகிறது. மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதற்குரிய சட்டதிட்டங்களை வகுக்கிறது இஸ்லாம். மனிதனுடைய சமூக அரசியல் வாழ்க்கை மட்டுமல்ல, அவனுடைய ஆத்மீக வாழ்க்கையையும் இஸ்லாம் வரையறுக்கிறது. மனிதனது உள்ளுணர்ச்சிகளும் இஸ்லாத்தின் பாற்பட்டதாயிருக்கவேண்டும். மனிதனது அரசியல் சமுதாய வாழ்க்கையை வரையறுக்கிற காரணத்தினாற்றான், நாம் இஸ்லாமிய அரசியல் முறை, இஸ்லாமிய சமுதாய வாழ்க்கை என்றெல்லாம் கூறுகிறோம். இஸ்லாமிய என்ற இந்த அடைமொழியைப் பாவிப்பதிலிருந்தே எவ்வளவு தூரம் இஸ்லாத்தின் செல்வாக்கு இவைகளில் இருக்கின்றன என்பதை நாம் அறிய முடிகிறது. இப்படித் தோன்றியதுதான் இஸ்லாமிய கலாச்சாரமும். இஸ்லாமிய அடிப்படையில் இருப்பதனாற்றான் நாம் இஸ்லாமிய கலாச்சாரம் என்று கூறுகிறோம்.

இஸ்லாமிய கோட்பாட்டின்படி மத வாழ்க்கை லௌகீக வாழ்க்கை என்ற பாகுபாடு இல்லை. மனிதனுடைய எண்ணங்கள் முதற்கொண்டு அவனு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய செய்கைகள் எல்லாவற்றையும் பாதிக்கிறது. மனிதனுடைய வாழ்க்கைக்கு உதவும் எல்லாவற்றையும் நன்மையென்றும், கேடு விளைவிப்பன எல்லாவற்றையும் தீமை என்றும் இஸ்லாம் பிரிக்கிறது. மனிதன் தனது சிந்தனை சக்தியை உபயோகித்து வாழ்க்கையைப் பண்படுத்தவேண்டும் என்று அடிக்கடி இஸ்லாம் வற்புறுத்துகிறது. வெறும் நம்பிக்கை இருந்தால் மட்டும் போதாது, பகுத்தறிவால் ஆராய்ந்து ஒரு பொருளின் உண்மையை அறியும் சக்தியும் வேண்டும்.

இஸ்லாமிய கலாச்சாரம் என்று சொல்லும் போது நாம் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய கலாச்சாரம் என்றே பொருள் கொள்கிறோம். கலாச்சாரமும் சமயமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருப்பதாற்றான் நாம் இஸ்லாமிய கலாச்சாரத்தைப் படிக்கும்போது இஸ்லாமிய சமயத்தின் தத்துவங்களைப் படிக்க முற்படுகிறோம். இஸ்லாமிய கலாச்சாரம் மகோன்னதமாயிருந்த காலத்தும் பிறகு வீழ்ச்சியுற்ற காலத்திலும், சமயத்தின் செல்வாக்கைத்தான் காண்கிறோம். இஸ்லாமிய கலாச்சார அமைப்பில் அறிவு, இலக்கியம், சிற்பம், சமுதாய வாழ்க்கை, அரசியல் முறை இவை எல்லாவற்றிலும் இஸ்லாமிய சமயத்தின் செல்வாக்கைத்தான் நாம் காண்கிறோம்.

இஸ்லாமிய கலாச்சார அமைப்பில் தோன்றும் கருத்துக்களும், எண்ணங்களும், இஸ்லாமிய தத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்தின் அடிப்படையில் தோன்றுகின்றன என்ருல் மிகையாகாது. ஆகவே இஸ்லாமிய தத்துவங்களேயும் கோட்பாடுகளேயும் நன்ருக அறிந்தால் தான் இஸ்லாமிய கலாச்சாரத்தை அறியமுடியும்.

இஸ்லாமிய கலாச்சார அமைப்பில் மனிதத்துவம் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. மனித சமுதாயத்தின் சுபீட்சமே இஸ்லாமிய கலாச்சாரத்தின் லட்சியம். மனிதனுக்கு மனிதன் சமம். இக் கலாச்சார அமைப்பில் சாதிமத பேதமில்லை. ஏழை அடிமை என்று பாகுபாடு இல்லை. உயர்ந்தோர் இழிசனர் என்ற ஏற்றத்தாழ்வுகளில்லை. சுருங்கச்சொன்னல் சமதர்மத்தின் இருப்பிடம் தான் இஸ்லாமிய கலாச்சாரம். இஸ்லாமிய சட்ட திட்டங்கள் எல்லா முஸ்லிம்களுக்கும் பொது. அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் சரி இந்தக் கலாச்சாரப் பண்புகள் அவர்களுடைய சமுதாயங்களில் வேரூன்றியிருக்கும். இந்த ஒருமைப்பாடுதான் இஸ்லாமிய சகோதரத்துவம் வளர்வதற்கும் காரணம்.

இஸ்லாமிய கலாச்சார அமைப்பில் எப்படி மனிதத்தன்மை போற்றப்பட்டது என்பதற்கு இஸ்லாமிய நாகரிக உலகை நாம் சிறிது பின்னேக்கிப்பார்க்கவேண்டும். இஸ்லாம் மனிதத்தன்மையை மதிக்கிறதென்ருல் ஏன் பிறநாட்டு, பிறமத மக்களேப் போரில் வென்று அவர்களை அடிமைப் படுத்தி இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை நிலைநாட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யது? என்ற கேள்வி எழலாம். 'மத விஷயத்தில் பலாத்காரம் உபயோகிக்க கூடாது' என்பது இஸ்லாமிய சட்டதிட்டங்களில் ஒன்று. 'ஆண்டவனுக்கு விரோதமாக, உன்னையும் கொல்ல வருபவனோடு யுத்தம் செய்யத் தயங்காதே. ஆனால் நீயாக பலவந்தமாய் ஒருவனைத் தாக்காதே' என்பதும் இஸ்லாமிய சட்டங்களில் ஒன்று. இஸ்லாத்தைப்பரப்ப பலாத்கார முறையைக் கைக்கொள்ளக் கூடாது என்பது இதிலிருந்தே தெரிகிறதல்லவா? இஸ்லாமிய வரலாற்றைப் படிக்கும்போது இஸ்லாம் வாள் முனையில் பரப்பப்படவில்லை என்ற உண்மையை யாராலும் மறுக்கமுடியாது. இஸ்லாம் பரவிய ஆரம்ப காலத்தில் இஸ்லாமிய சட்டம் மிகவும் நுணுக்கமாக அனுஷ்டிக்கப்பட்ட காலத்தில் இஸ்லாம் சமாதான முறையிலேயே பரவியது

எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலும் அவருக்குப் பிறகும் நடந்த யுத்தங்கள் தற்காப்புக்காக நடந்த யுத்தங்களே. உலகமே அறிந்திராத யுத்த தர்மத்தை அனுஷ்டித்தே இவ் யுத்தங்கள் நடைபெற்றன. உலகமே கண்டறியாத தர்ம நெறியிலிருந்து யுத்தம் செய்தனர் முஸ்லிம்கள். பாலைவனங்களில் அடிமை வாழ்வு வாழ்ந்து வந்த அரபியர்கள் மற்றவர்களை அடக்கி ஆளும் அளவிற்குத் திடீரென்று பலம் பொருந்தியவர்களாக மாறவில்லை. அன்றைய அநாகரிக உலகிலே இஸ்லாத்தைத் தழுவிய அர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிய முஸ்லிம்கள் கடைப்பிடித்து வந்த தர்மமும் நியாயமும் அவர்கள் மனிதத் தன்மைக்கு கொடுத்த மதிப்பும் தான், பிறநாட்டு மக்கள் அவர்களிடம் நம்பிக்கையும், மதிப்பும் இவர்களது புதிய மதத்தைத் தழுவவும் காரணமாயிருந்தது.

இஸ்லாம் அரேபியாவில் பரவியகாலத்தில் அதைச் சுற்றியுள்ள நாடுகளான எகிப்து, பாரசீகம், சிறியா ஆகிய நாடுகளில் வசித்த மக்கள் அடிமை வாழ்வு வாழ்ந்து வந்தனர். அந்நியரின் ஆதிக்கத்தில் நலிந்து நசிவுற்றனர். தங்கள் எஜமானர்களாகிய பிரபுக்களுக்கு உடலையும், மதகுருக்களுக்கு ஆத்மாவையும் அடிமையாக்கி இழிவான நிலையிலிருந்தனர் பெரும்பான்மையான மக்கள். மக்காவிலும், மதீனாவிலும் தோன்றிய இஸ்லாம் என்ற சுடரின் ஒளி அஞ்ஞாத இருளில் இருந்த இந்த மாக்களுக்கும் சிறிது பரவியது. அதே சமயத்தில் நபிகள் நாயகத்தின் தூதுவர்கள் இஸ்லாத்தின் தர்மத்தை இந்நாட்டு மக்களுக்கு விளக்குவதற்காகச் செல்லத் தொடங்கினர். இஸ்லாத்தின் தத்துவங்களான சமதர்மம், சகோதரத்துவம், இந்நாடுகளிலிருந்த ஆட்சி பீடங்களின் அஸ்திவாரத்தையே ஆட்டத்தொடங்கின. சர்வாதிகாரத்திலும், எதேச்சாதிகாரத்திலும் மூழ்கியிருந்த இவ்வாட்சியாளர்கள் தர்மத்தைப் போதிக்கவந்த நாயகத்தின் தூதுவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினர். அடக்குமுறை, அதர்மம், எஜமான்-அடிமை என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலைவகளினுல் கட்டப்பட்ட இவ்வரச பீடங்கள் சம தர்மத்தையும், நீதியையும் நிலைநாட்டவந்த இஸ்லாத்தையும் ஆண்டவனின் தூதராகிய நபிகள் நாயகத்தையும் எதிர்க்கத்தொடங்கினர். இவர்களுடைய எதிர்ப்பு வெற்றிபெற்றிருந்தால் இஸ்லாம் அழிந்து திரும்பவும் உலகம் நாஸ்திகம் என்ற இருளில் மூழ்கியிருக்கும். சத்தியத்தின் இருப்பிடமாகவும், ஆண்டவனின் வேதமுமாகிய இஸ்லாத்தைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாயிற்று. இஸ்லாத்தையும், முஸ்லிம்களாகிய தங்களையும் பாதுகாக்கு முகமாக எழுந்த யுத்தங்களே இவ்வாரம்ப யுத்தங்கள்.

இவ் யுத்தங்களில் வெற்றிபெற்ற பிறகு, வெற்றிகொண்ட மக்களை அரபியர்கள் துன்புறுத்தவில்லை. தங்கள் ஆட்சிக்குக் கீழ்வந்த மக்களைப் பலவந்தமாக மதம் மாற்றவுமில்லை. 'வாள்முனையில் தான் இஸ்லாம் பரப்பப்பட்டது' என்ற தப்பபிப்பிராயம் மேல்நாட்டு கிறிஸ்தவ ஆசிரியர்களால் பரப்பப்பட்டது. சிலுவை யுத்தங்களுக்குப் பிறகு முஸ்லிம்களை அதிகமாக வெறுக்கத்தொடங்கினர் மேற்கு நாட்டவர். மேலும் ஐரோப்பாவின் ஒரு பகுதியை தன்னுள்ளடக்கிய இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை ஐரோப்பாவிலிருந்து ஒழிப்பதற்கும், முஸ்லிம் ஆட்சியாளர்களை விரட்டுவதற்குமே இவ்வகையான பொய்ப்பிரச்சாரங்களை இவர்கள் பரப்பத்தொடங்கினர். இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு முஸ்லிம்கள் நாகரிகத்திலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிலும் பின்னடையத் தொடங்கியதனுற்றுன் இப்படிப்பட்ட தப்பெண்ணங்களை எதிர்க்கச்சக்தி யற்றவர்களாயினர். இதனுல், இஸ்லாத்தின் விரோதிகளால் பரப்பப்பட்ட இப்பொய்ப் பிரச்சாரம் நாலாதிக்குகளிலும் பரவி, முஸ்லிம்கள் ஒருவித கொடுங்கோலர்கள் என்ற எண்ணம் நிலைக்கத் தொடங்கியது.

அரேபிய பாலைவனங்களில் மந்தைமேய்த்துக் கொண்டிருந்த ஒரு கூட்டத்தார் உலகமே கண்டறியாத சாம்ராஜ்யத்தை நிறுவி, பெரும்பான்மையான மக்களை இஸ்லாத்தைத் தழுவச் செய்தார்களென்றுல், இதற்குக் காரணம் அவர்களுடைய உடல் பலமும், கொடுங்கோலாட்சியும் அல்ல. இப்படித் தோன்றிய சாம்ராஜ்யங்கள் காலகதியில் காலாவதியாகி, மண்ணேடு மண்ணுகி மறைந்து மக்கிப்போனதை நாம் வரலாற்றிலிருந்து அறிகிறோம். இஸ்லாமிய சாம்ராஜ்யம், எந்த சாம்ராஜ்யத்திற்கும் நடப்பதுபோல, மறைந்தாலும், அதன் இருதயமாயமைந்த இஸ்லாம் இன்றும் உலகின் எல்லாப் பாகங்களிலும் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டேயிருக்கின்றது. வாள்முனையில் பலாத்கார முறையில் இஸ்லாம் பரப்பப்பட்டதென்றுல் இஸ்லாம் என்றோ அழிந்திருக்கும். இஸ்லாத்தில் சொல்லப்பட்ட நற்போதனைகளும், அதன் நற்பண்புகளும்தான் இஸ்லாம் பரவுவதற்கும், நிலை நிற்பதற்கும் காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் ஆட்சியின்கீழ்வந்த மக்களை அரபிய முஸ்லிம்கள் துன்புறுத்தவில்லை. அவர்களுக்கு முன்னிருந்த ஆட்சியாளர்களெல்லாம் தங்களின் கீழ்வந்த மக்களை மிருகங்களைவிடக் கேவலமாக நடத்தினார்கள். முஸ்லிம்கள் அப்படி நடத்தவில்லை. தங்கள் ஆட்சிக்குக் கீழ்வந்த மக்களை மிகவும் கண்ணியமான முறையில் நடத்தினார்கள். ஆட்சியாளர்களும், ஆட்சிக்குட்பட்டவர்களும் சமமாகப் பழகத் தொடங்கினர். முஸ்லிம்கள் மனிதனை மதித்தார்கள். மனிதத்தன்மைக்கு மதிப்பு கொடுத்தார்கள். தர்மத்தின்பால் ஒழுகினார்கள். சத்தியத்தைக் கடைப்பிடித்தார்கள். ஆட்சியாளர்களாயிருந்தும் முஸ்லிம்களின் இந்தப்பண்பட்ட வாழ்க்கையைக் கண்ட மக்கள் இஸ்லாத்தைத் தழுவத் தொடங்கினர். இஸ்லாம் பரவுவதற்குக் காரணம், இஸ்லாத்தின் தத்துவங்களும், அதைப் பின்பற்றிய முஸ்லிம்களின் பண்பட்ட வாழ்க்கையுமே யொழிய வாள்முனையும், பலாத்காரமும் அல்ல.

ஆட்சியாளர்களாகச்சென்ற முஸ்லிம்கள் அடிமை வாழ்வு வாழ்ந்த மக்களின் அடிமைத்தளையை அறுத்தெறிந்தது மட்டுமல்லாமல் அவர்களுடன் திருமண உறவும் கொள்ளத் தொடங்கினர். இதுவரையில் உலகமே அறிந்திராத அளவில் இம்முஸ்லிம் ஆட்சியாளர்கள் நடந்தனர். அடிமைகளாக இருந்த இம்மக்கள் இஸ்லாமிய உலகில் அரசியல் சுதந்திரம் மட்டுமல்ல, அறிவுச் சுதந்திரத்தையும் பெற்றார்கள். மதகுருமார்களின் கோரப்பிடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் சிக்கி அறியாமைச் சிறையில் அடைப்பட்டுக் கிடந்த இம்மக்களுக்கு, அறிவின் கதவுகளைத் திறந்துவிட்டவர்கள் முஸ்லிம்களே. மத்திய தரைக்கடல் பகுதி மக்களெல்லோரும் தாங்கள் அரபிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்வதற்குக் காரணம் இதுதான்.

அறியாமை என்னும் தளை அறுத்தெறியப் பட்டு அறிவுச் சுதந்திரம் பெற்ற மக்கள் வரலாறே கண்டறியாத அளவுக்கு அறிவில் மேன்மையுறத் தொடங்கினர். இஸ்லாமிய உலகம் என்ற நந்த வனத்திலே அறிவின் மணம் வீசத்தொடங்கியது. இஸ்லாமிய கலாச்சாரம் வேர்விட்டு வளர்ந்து புது மலர்களைப் பூக்கத்தொடங்கியது. விஞ்ஞானம், கலை, இலக்கியம் ஆகிய மலர்கள் மலர்ந்து மணம் வீசத் தொடங்கின. இந்த நறுமணம் இஸ்லாமிய உலகத்திற்கு மட்டுமல்ல, அநாகரிக வாழ்வுவாழ்ந்து வந்த ஐரோப்பியர்களுக்கும் பயன்பட்டது.

இஸ்லாமிய ஆட்சியாளர்களின் பரந்த மனப் பான்மையும் இஸ்லாமிய கலாச்சாரத்தின் ஒரு முக்கிய அம்சமாக விளங்கியது. சமயவேறுபாடு காரணமாக மக்கள் வதைக்துக் கொல்லப்பட்ட அதே உலகில் தான் இஸ்லாம் சமய சமரசத்தைக் கடைப்பிடித்து வந்தது. பிற சமயத்தவர்கள் மேற்கு நாடுகளில் இருந்ததைப் போல் இஸ்லாமிய உலகில் துன்புறுத்தப்படவில்லை. எல்லா மதத்த வர்களையும் ஒரேநிலையில் வைத்துப் பரிபாலித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனர் முஸ்லிம் ஆட்சியாளர்கள். முஸலிம் என்ற காரணத்தினுல் எந்தவித சலுகையும் கொடுக்கப்படவில்லை. நீதி வழங்குவதிலும் முஸ்லிம் உலமாக்கள் சலுகைகள் காட்டவில்லை. முஸ்லிமாயிருந்தாலும் சரி முஸ்லிம் அல்லாதவரா யிருந்தாலும் சரி, நீதி வழங்கும்போது தயைதாட் சண்யம் காட்டாது, ஒரே நிலையில் வைத்து நீதி வழங்கினர் முஸ்லிம் உலமாக்கள். இதற்கு ஒரு சிறந்த உதாரணத்தை இஸ்லாமிய வரலாற்று ஏட்டிலிருந்து காட்ட விரும்புகிறேன்.

இஸ்லாமிய வரலாற்றிலே இருள் சூழ்ந்த கட் டத்தில் நடந்தது இந்தச் சம்பவம். நீதியையும் தர்மத்தையும் முஸ்லிம்கள் எப்படிக் காப்பாற்றி வந்தார்கள் என்பது இந்த வரலாற்றுச் சம்பவத்தி லிருந்தே நாம் அறிய முடிகிறது. மங்கோலிய வெறியர்களின் கையில் இஸ்லாமிய சாம்ராஜ்யம் சிக்கி, சின்னுபின்னமாகிக் கொண்டிருந்தது. இஸ் லாமிய சாம்ராஜ்யத்தின் இருதயபீடமாயமைந்த பாக்தாத் வீழ்ந்தது. இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகத்திகழ்ந்த அப்பாசி கலீபா மங் கோலியத் தலைவன் ஹுலாகு கானிடம் அகப்பட்டு மிகவும் பரிதாபகரமான நிலையில் காணப்பட்டார். கலீபாவைக் கூண்டில் நிறுத்தி உலமாக்களை வர வழைத்து நீதிவழங்கச் சொன்னுன் மங்கோலியத் தலைவன். அவர்களுடைய தீர்ப்பில் தங்கியிருந் தது கலீபாவின் எதிர்கால வாழ்வும், இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் எதிர்காலமும். அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்ராஜ்யத்தைப்பற்றியோ கிலாபத்தின் எதிர் காலத்தைப்பற்றியோ எண்ண நேரமில்லை. அவர்களை எதிர்நோக்கிய பிரச்சினை இதுதான். அஷ்ஹரியாவின் பிரகாரம் இஸ்லாத்தில் நம்பிக்கையில்லாதவனயிருந்த போதிலும், தர்மத்தைக் கடைப்பிடிக்கும் மங்கோலியத் தலைவனை ஆதரிப்பதா அல்லது முஸ்லிம் அரசனயிருந்தும் அதர்ம வாழ்க்கை வாழ்ந்த கலீபாவை ஆதரிப்பதா? உலமாக்கள் எல்லோரும் என்னசெய்வதென்று தெரியாமல் விழித்துக்கொண்டிருந்த சமயம், அவர்களுள் தலைவரான றிசாவுத்தீன் அலி இப்னு தவாஸ் என்பவர் எழுந்து நின்று, உண்மை வேதத்தில் நம்பிக்கையில்லாதவனயிருந்தாலும், அவன் பால் தான் நீதி இருக்கிறது என்று சொல்லிவிட்டு இருந்தார். மற்ற உலமாக்கள் எல்லோரும் இதை ஆமோதித்தார்கள். இதுதான் இஸ்லாமிய பண்பாட்டின் அடிப்படை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. இஸ்லாமிய சகோதரத்துவம்.

இஸ்லாமிய கலாச்சார அமைப்பில் நீதி, நெறி, தர்மம் ஆகியவை வகித்த இடத்தை முன்னைய அத்தியாயத்தில் அறிந்தோம். இஸ்லாமிய பண்பாட்டுமுறையில் சகோதரத்துவமும், சகிப்புத்தன்மையும் முக்கிய அம்சங்களாக விளங்குகின்றன. இப்பண்பாட்டு முறையில் வாழ்ந்த முஸ்லிம்கள் எப்படி தலைமுறை தலைமுறையாக இப்பண்புகளைக் கடைப்பிடித்து வந்திருக்கின்றனர் என்பதைக் கவனிப்போம்.

இஸ்லாமிய சகோதரத்துவத்தைப் பற்றித் திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

> " மனிதர்களே ! ஒருவடத்தை எல்லோரும் சேர்ந்து
> பிடிப்பதைப் போல் ஆண்டவனின் புனித
> சட்டத்தைப் பின்பற்றுங்கள். அதனின்றும் விலகி
> நடக்காதீர்கள். விரோதிகளாயிருந்த உங்களைச்
> சிநேகிதர்களாக்கினன். அவனுடைய அருளால்
> நீங்கள் சகோதரர்களாயிருக்கிறீர்கள் "

ஒருவரையொருவர் பகைத்துக்கொண்டு வாழ்ந்த அரபியர்களை ஒற்றுமைப்படுத்தி, அவர்களிடையே சகோதரத்துவத்தை நிலைநாட்டியது இஸ்லாம். இஸ்லாத்தின் தோற்றத்திற்குப் பிறகு அரபியர்கள் கண்ட முன்னேற்றத்தை இவ்வரிகள் எமக்கு ஞாபகப்படுத்துகின்றன. முஸ்லிம்கள் எல்லோரும் ஒருதாய் வயிற்றின் சகோதரர்களைப்போல் ஆண்டவனின் புனித சட்டமாகிய குர்ஆனைப் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி முன்னேற வேண்டுமென்று கட்டளையிடு கிறது இஸ்லாம். இதற்கேற்றாற்போல் எம்பெரு மானார் நபிகள் நாயகம்(ஸல்)அவர்களின் போதனை களும் அமைந்திருக்கின்றன.

"முஸ்லிம்கள் எல்லோரும் ஒரு மதிலைப் போன்றவர்கள், ஒரு பகுதி இன்னொரு பகுதியை எப்படி தாங்குகிறதோ அப்படி யிருக்கவேண்டும். முஸ்லிம்கள் எல்லோரும் ஓர் உடலை ஒத்தவர்கள். உடலில் ஒரு கண்ணுக்கோ அல்லது ஒரு விரலுக்கோ காயம் ஏற்பட்டால் எப்படி அது உடல் முழுவதையும் வருத்துமோ அப்படியே ஒரு முஸ்லிமுக்குத் தீங்கு ஏற்பட்டால் அது முஸ்லிம்கள் அத்தனை பேரையும் பாதிக்கும்"

சகோதரத்துவத்தைப் பற்றிக் கூறுவதற்கு இதை விட பொன்மொழிகள் தேவையில்லை.

இஸ்லாமிய உலகிலே நிறவேற்றுமையென்று ஒன்றிருக்கவில்லை. இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் தலைசிறந்த அரசர்களும், அறிஞர்களும், ஞானிக ளும் கருநிறத்தையுடையவர்களே. எமன் தேசத் தின் அரசன் ஐய்யாஷ் எகிப்தின் தலைசிறந்த வர லாற்றாசிரியரான அஹ்மத்-அல்-ஜபார்த்தி போன்ற வர்கள் நிலக்கரியைவிட கருநிறமுள்ளவர்கள். ஆபிரிக்காவில் கருநிறத்தவரும் அனடோலியா போன்ற பகுதிகளில் வாழும் வெள்ளை நிறமுடைய முஸ்லிம்களும் ஏற்றத்தாழ்வு ஏதுமில்லாமல் சம அந்தஸ்துடன் பழகினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய கோட்பாடுகள் இந்த சகோதரத் துவத்தை வலியுறுத்துகின்றன. உயர்ந்தோன், தாழ்ந்தோன், ஏழை-பணக்காரன், எஜமான்-அடிமை என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் ஒன்றுகூடி ஆண்டவனை வணங்குதலையே இஸ்லாம் விரும்புகிறது. அன்றாடத் தொழுகையிலும், குறிப் பாக வெள்ளிக்கிழமை கொத்பாவிலும் முஸ்லிம் கள் எந்தவித வேறுபாடுகளுமில்லாமல் தங்களில் ஒருவரை இமாமாகத் தெரிந்து அவரின் பின்னால் நின்று தொழுவது இஸ்லாமிய சட்டங்களில் ஒன்று. முஸ்லிம்கள் ஹஜ்ஜு செய்யும் போதும், அரசன் ஆண்டி என்ற பாகுபாடு இல்லாமல் ஒரே வித வெள்ளையுடையணிந்து நின்று தொழவேண்டு மென்பது இஸ்லாமிய கோட்பாடுகளில் ஒன்று. ஒருவன் மௌத்தாகியபோதும், சாதாரண வெள் ளைத்துணியில் அவன் உடலை மறைத்து எந்தவித ஆடம்பரமுமில்லாமல் கபறுக்குள் வைக்கும் இந்த வழக்கம் மனிதர்களெல்லோரும் சமம் என்ற உண் மையை நினைவுறுத்துகிறது. மனித சமுதாயத் தின் ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் நிலைநாட்டுவதற்கு இதைவிட வேறு சட்டங்கள் தேவையில்லை. ஒவ்வொரு முஸ்லீமின் லட்சியமும் இஸ்லாத்தின் லட்சியத்தைப் பிரதிபலிக்க வேண் டும். மனித சமுதாயத்தின் ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் தான் ஒவ்வொரு முஸ்லீ மும் தனது வாழ்க்கை லட்சியங்களாகக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய கலாச்சாரத்தின் இன்னெரு முக்கிய பண்புதான் சகிப்புத்தன்மை. மேல்நாட்டு வரலாற்றுசிரியர்கள் முஸ்லிம்களைப் பற்றித் தப்பான அபிப்பிராயத்தையே பரப்பி வந்திருக்கின்றனர். முஸ்லிம்கள் பிற மதத்தவர்களைத் துன்புறுத்திஞர்கள் என்ற பொய்ப்பிரச்சாரத்தைப் பரப்பி வந்தனர். பிற்காலத்தில் தோன்றிய ஒரு சில முஸ்லிம் அரசர்கள் மதவெறியால் பிற மதத்தவரைத் துன்புறுத்தியிருக்கலாம். ஆஞல் இஸ்லாமிய சாம்ராஜ்ய காலத்திலே இவ்வகையான சம்பவங்கள் ஏதும் நடக்கவில்லை என்று உறுதியாகக் கூறலாம். எம்பெருமாஞர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரஃபாத் மலையில் செய்த தனது கடைசிப் பிரசங்கத்திலும் இந்தச் சகோதரத்துவத்தை அழுத்திக் கூறியிருக்கிருர்கள்.

> ''முஸ்லிம்கள் எல்லோரும் ஓர் உடன் பிறப்புச் சகோதரக் குழுவைப் போன்றவர்கள். ஒருவரையொருவர் சகோதரரைப் போல் மதிக்க வேண்டும்.

இப்படிச் செல்கிறது நாயகத்தின் போதனைகள். ஆகவே இஸ்லாமிய கலாச்சாரத்தின் அடிப்படைப் பண்புகளில் ஒன்றுதான் இச்சகோதரத்துவமும். ஒருவன் எந்த இனத்தைச் சேர்ந்தவஞயிருக்கட்டும், என்ன மொழியைப் பேசுபவஞயிருக்கட்டும், என்ன நாட்டைச் சேர்ந்தவஞயிருக்கட்டும், என்ன நிறத்தையுடையவஞயிருக்கட்டும், ஒரு முஸ்லிம் என்றளவில் அவன் தோளோடு தோள் நின்று மற்ற முஸ்லிம்களுடன் சம உரிமையுடன் பழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் என்பது இஸ்லாமிய கோட்பாடுகளில் ஒன்று. இஸ்லாமிய சகோதரத்துவத்தில் இவ்வேறுபாடுகளுக்கு இடமில்லை. இனம், மொழி, நாடு, நிறம் ஆகியவேறுபாடுகளையெல்லாம் கடந்து நிற்பது தான் இஸ்லாமிய சகோதரத்துவம். முஸ்லிம்களுக்கொரு நாடுவேண்டுமென்று இந்திய முஸ்லிம்கள் உரிமைக்குரலெழுப்பிய போது எமது உள்ளங்களும் உரிமைக் குரலெழுப்பின. 'பாக்கிஸ்தான்' என்ற பெயரைக் கேட்டவுடனே எம் உள்ளுணர்வில் ஒருவித பூரிப்பு ஏற்பட்டது. அல்ஜீரியாவிலுள்ள முஸ்லிம்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டனர் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் உலகிலுள்ள ஒவ்வொரு முஸ்லீமின் உள்ளமும் குமுறி எழுந்தது. எகிப்தின் மீது ஆங்கிலேயர் குண்டுகளை வீசினார்கள் என்றபோது உலகிலுள்ள அத்தனை முஸ்லிம்களும் கண்டனக் குரல் எழுப்பினார்கள். சுருங்கச்சொன்னால் இதுதான் இஸ்லாமிய சகோதரத்துவம். இந்த சகோதரத்துவத்தில் வளர்ந்தது தான் இஸ்லாமியக் கலாச்சாரம்.

இஸ்லாமிய நாகரிகத்தைப் பின்னோக்கிப் பார்க்கும் போதும் இந்த பண்பைத்தான் நாம் காண்கிறோம். இஸ்லாமிய உலகிலே நிறம், இனம் என்ற வேற்றுமைகள் இருக்கவில்லை.

> "அதர்ம வாழ்க்கை வாழ்ந்து வரும் ஒரு குறைஷ் வம்சத்தைச் சேர்ந்த ஷரிபைவிட, தர்மத்தின் பால் ஒழுகி நடக்கும் ஒரு அபிசீனிய அடிமை நாட்டின் பரிபாலனத்தை ஏற்று நடத்துவதற்குத் தகுதியுடையவன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது திருநபி வாக்கு. நாயகத்தின் வாக்குப் பிரகாரமே அன்றைய முஸ்லிம்கள் நடந்துவந்தனர். எல்லா இனத்தவர்களும், எல்லா நிறங்களையுடையவர்களும் அன்றைய இஸ்லாமிய உலகிலே சம உரிமைகளுடன் பழகினர்.

ஆனால் முஸ்லிம்களின் பண்புகளை பிற நாட்டு வரலாற்ருசிரியர்கள் மறைத்துவிட்டனர். முஸ்லிம் சமுதாயமே வீழ்ச்சியுற்ற காலத்தில் முஸ்லிம்களைக் கொடுங்கோலர்கள் என்று உலகுக்குக்காட்டினர். இக்கூற்றுக்களை மறுக்க முஸ்லிம் சமுதாயம் வலுவற்றதாயிருந்தது. முஸ்லிம்கள் பிற சமயத்தவர்களால் அநியாயமாகக் கொல்லப்பட்டதை இவ்வாசிரியர்கள் மறைத்துவிட்டனர். ஒரு பிரெஞ்சு ஆசிரியர் வரலாறு எழுதும்போது முஸ்லிம்களைப் பற்றிக் குறிப்பிட்டதைச் சிறிது கவனிப்போம்:-

> முகம்மதியர்கள் மதத்தில் நம்பிக்கையில்லாதவர்கள். அவர்கள் சிலைகளை வணங்குகிருர்கள். அவர்கள் முகம்மத், ஒப்பொலேன், தர்மொகொஸ்ட் என்ற மூன்று விக்கிரகங்களை வணங்குகிருர்கள். ஸ்பெயின் தேசத்திலிருந்து முகம்மதியர்கள் விரட்டப்பட்டபோது அவர்கள் தாங்கள் வணங்கி வந்த கடவுள்களின் சிலைகளின்மேல் காரி உமிழ்ந்து அவைகளைச் சின்னுபின்னம் செய்து, கால்களிஞல் மிதித்து உடைத்தார்கள். சக்கரவர்த்தி சார்லஸ், அவர்களுடைய நகரங்களைக் கைப்பற்றியபோது அவர்கள் பள்ளிகளில் இருந்த 'முகம்மத்' என்ற கடவுளின் சிலைகளைத் தேடி பெரிய இரும்பு கொண்டு உடைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய வரலாற்ருசிரியர்கள் முஸ்லிம்களைப் பற்றி எழுதிய வரலாறு இதுதான். இவர்களுடைய நூல்களைப் படித்த ஐரோப்பியர்கள் துவேஷத்தை வளர்த்தார்கள் என்ருல் அதில் ஆச்சரியப்படுவதற் கில்லை. துருக்கி சாம்ராஜ்யத்தில் புரட்சிகளைக் கிளப்பிவிட்டு, இப்புரட்சிகளை அடக்குவதற்கு துருக்கி அரசர்கள் எடுத்த முயற்சிகளை முஸ்லிம் கள் பிறமதத்தவர்களை அநியாயமாக வதைக்கின் றனர் என்று பொய்ப் பிரச்சாரம் செய்தன ஐரோப்பிய அரசர்கள். ஆனுல் இப்புரட்சிக்காரர் களின் கையில் சிக்கி அநியாயமாகக் கொல்லப் பட்ட எண்ணற்ற முஸ்லிம்களைப்பற்றிப் பிரஸ்தா பிப்பார் யாருமே இருக்கவில்லை.

இஸ்லாமிய சாம்ராஜயத்தின் வரலாற்றைப் படிக்கும்போது முஸ்லிம் ஆட்சியாளர்கள் எவ்வ ளவு கண்யமான முறையில் நடந்தனர் என்ற உண் மையை அறிகிருேம். பிறமதங்களை மதிப்பது ஒவ் வொரு முஸ்லிமினதும் கடமை. நபிகள் நாயகத் துக்கு முன்தோன்றிய தாவூத் (அலை) மூசா (அலை) ஈசா (அலை) ஆகியவர்கள் மனிதர்களை நல்வழிப் படுத்துவதற்கு ஆண்டவனுல் அனுப்பப்பட்ட திருத்தூதர்கள் என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆண்டவனுல் அனுப் பப்பட்ட வேதங்களெல்லாம் உண்மையென உறு திப்படுத்த வந்த வேதம் தான் இஸ்லாம். இந்த அடிப்படையில் வளர்ந்த ஒரு முஸ்லிம் பிற மதத் தவர்களை துவேஷிப்பான் என்று சொல்வது நியாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றது. இஸ்லாமிய வரலாற்றிலிருந்து ஒரு சம்ப வத்தை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

முஸ்லிம்கள் ஜெரூஸலத்தைக் கைப்பற்றிய பின் முஸ்லிம் தளபதி, கலீபா உமர் இப்னுல் கத்தாப் அவர்களை நேரில் வந்து இப்புனித நகரின் திறவுகோலைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார். இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் தனிப்பெருந்தலைவர் கலீபா உமர் ஒரே ஒரு அடிமையுடன் தன்னந்தனியராகவே வந்தார். ரோம சாம்ராஜ்யத்தின் படாடோப வாழ்க்கையையும், ரோம அதிகாரிகளின் அகங்கார நடத்தைகளையும் கண்டு பழகிய பாலஸ்தீன மக்களுக்கு, ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி தன்னந்தனியராக வரும் காட்சி எத்தனை வியப்பை அளித்திருக்கவேண்டும். பாலஸ்தீன கிறிஸ்தவர்கள் உமரை வரவேற்றுத் தங்கள் கோயிலுக்குள் அழைத்துச் சென்றார்கள். அஸர் தொழுகைக்கு நேரமாகியதும் கிறிஸ்தவ அதிகாரிகள் கலீபாவுக்கு கோயிலுக்குள்ளேயே கம்பளம் விரித்தார்கள். கோயிலுக்குள்ளிருந்து தொழ கலீபா மறுத்துவிட்டார்கள். ஏனென்றால், தான் தொழுத காரணத்தை வைத்துக்கொண்டு சில அறிவற்ற முஸ்லீம்கள் கோயில்களை அபகரிக்க நேரிடும் என்ற காரணத்தினாற்றான் மறுத்ததாகக் கூறினார். எல்லா சமயத்தவர்களும் முழு உரிமையுடன் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தில் வாழவேண்டும் என்ற கொள்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் கலீபாக்கள் கடைப்பிடித்து வந்தார்கள்.

இஸ்லாமிய அஷ்ஹரீயத்தைக் அடிப்படையாகக்கொண்டு வளர்ந்ததுதான் இஸ்லாமியக் கலாச்சாரம். இஸ்லாமிய சட்டத்தில் சகோதரத்துவமும், சகிப்புத்தன்மையும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இஸ்லாமிய சட்டத்தின் பிரகாரம் தான் முஸ்லிம்கள் வாழ்க்கை நடத்தி வந்திருக்கிறார்கள். இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள். இஸ்லாமிய ஷரி அத்தைப் பின்பற்றியதனால்தான் இஸ்லாமிய சாம்ராஜ்யம் ஓங்கி வளர்ந்தது. முஸ்லிம்கள் ஷரி அத்திலின்றும் என்று விலகி வாழத் தொடங்கினார்களோ அன்றே தங்கள் வீழ்ச்சிக்கு அவர்கள் வித்தூன்றிவிட்டார்கள். இஸ்லாமிய சாம்ராஜ்யம் வீழ்ந்து, முஸ்லிம்கள் பிற நாட்டவர்களுக்கு அடிமைகளாக வாழும் இழிநிலை அடைந்தார்கள். அன்றைய உலகமெங்கும் வியாபித்திருந்த இஸ்லாமிய சாம்ராஜ்யம் சிதறுண்டு, சின்னபின்னமாகி முஸ்லிம்கள் சீர்குலைந்தனர்.

இஸ்லாமிய சாம்ராஜ்யம் வளர்ந்தகாலத்தில் முஸ்லிம்கள் எல்லா மக்களையும் சமமாகப் பாவித்தார்கள். தாங்கள் ஆட்சிகொண்ட மக்களுடன் ஆட்சியாளர்களைப்போல் பழகாமல், சகோதரப் பாசத்துடன் பழகினர். அவர்களுடன் திருமண உறவும் கொண்டனர். மக்களின் அறிவுக்கு அணை கட்டிக் கட்டுப்படுத்தவில்லை. எல்லோருக்கும் அறிவுச் சுதந்திரம் அளித்தார்கள். இதனால் பலவகையான கலைகளும், விஞ்ஞானமும் வளர்ந்தன. இஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாமிய சாம்ராஜ்யம் வளர்ந்து, உலகின் பெரும் பாகத்தைத் தன்னுள்ளடக்கியது. அப்பாசிய கலீபாக்களின் காலத்தில் இஸ்லாமிய சாம்ராஜ்யம் பேரொளியுடன் திகழ்ந்தது. ஐந்து நூற்றுண்டுகளாக உலகுக்கு ஒளி கொடுத்துக்கொண்டிருந்த இஸ்லாமிய நாகரிகத்தின் ஒளி மங்கத்தொடங்கியது. இதற்குக் காரணம் முஸ்லிம்கள் ஷரி அத்தினின்றும் தவறி நடந்ததே.

இஸ்லாத்தின் பரப்பை சமயக்கட்சிகள் என்ற வரம்புக்குள் கட்டுப்படுத்தத் தொடங்கினார்கள் முஸ்லிம்கள். இக்குறுகிய கட்சிப்பிரச்சாரத்திற்குக் கலீபாவும் இடம்கொடுத்தார். இக்கட்சிகள் போட்டி போட்டுக்கொண்டு கலீபாவை வானளாவப் புகழ்ந்தன. இஸ்லாமிய உலகில் நிலவிய அமைதியும், செழிப்பும் காரணமாக முஸ்லிம்கள் யுத்தப் பயிற்சியைக் கைவிட்டனர். இதனால் விளையப்போகும் அபாயத்தை முஸ்லிம் அறிஞர்கள் அடிக்கடி எடுத்துக் கூறினார்கள். அளவுக்கு மீறிய செழிப்பின் காரணமாக முஸ்லிம்கள் படாடோப வாழ்க்கையில் ஈடுபட்டு சோம்பேறிகளாக மாறினார்கள். சாம்ராஜ்யத்தின் எல்லைகள் ஒரு ஒருவித பாதுகாப்புமில்லாமல் விடப்பட்டன. இதனால் எல்லையைக்கடந்த எந்த ஒரு எதிரியும் ஒருவித எதிர்ப்புமில்லாமல் சாம்ராஜ்யத்தின் தலைநகருக்கே வரமுடிந்தது.

இஸ்லாமிய நாகரிகத்திற்கு ஒளியைக்கொடுத்துக் கொண்டிருந்த அறிவு மங்கத்தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனு சென்றாயினும் கல்வியைத் தேடு என்ற மனப் பாண்மையில் இருந்த முஸ்லிம்கள், பிறநாட்டு மக்களின் அறிவை ஏளனமாக மதித்தனர். உலகின் அறிவு ஸ்தலங்களாக அமைந்த முஸ்லிம் சர்வகலா சாலைகள் பொழிவிழந்தன. இம்முஸ்லிம் சர்வகலா சாலைகளின் ஆசிரியர்கள் அன்றைய உலகிலே மிகச் சிறந்த அறிஞர்களாக விளங்கினர். இந்த நிலை அதிககாலம் நீடிக்கவில்லை. அறிவுப்பசி நீங்கி, அறியாமையென்னும் குட்டையில் தேங்கிக் கிடக் கத் தொடங்கினர். அறியாமையுடன் சேர்ந்து வளர்ந்தது அகங்காரமும். வெளியுலகத்தையே பார்ப்பதை நிறுத்திவிட்டனர். அறியாமையென்ற இந்த ஆழ்ந்த உறக்கத்திலிருந்து கண்விழித்த போதுதான் உலகம் தங்களைவிட முன்னேறியதை உணர்ந்தார்கள். இந்த உறக்கத்திலிருந்து விழிப் பதற்கு பல நூற்றாண்டுகள் சென்றன. அடிவானத் தில் இஸ்லாமிய கலாச்சாரம் என்ற சூரியன் திரும் பவும் தோன்றியிருக்கிறான். இந்தச் சூரியன் திரும்பவும் உலகுக்கு ஒளி கொடுப்பான் என்பது எமது நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. இஸ்லாமிய கலைகள்.

இஸ்லாமிய கலாச்சாரத்தின் முக்கிய பண்புகளை ஏற்கனவே அறிந்தோம். நீதி, நெறி, தர்மம், மனிதத்துவம், சமத்துவம், சகோதரத்துவம், சகிப்புத்தன்மை ஆகிய பண்புகளை அஸ்திவாரமாக வைத்து எழுப்பப்பட்ட கட்டிடம் தான் இஸ்லாமிய கலாச்சாரம். கலாச்சாரம் என்ற கட்டிடத்தை அழகு படுத்துவனதான் கலைகள். சமத்துவம், சகோதரத்துவம் போன்றவை கலாச்சாரத்தின் உட்பண்புகள். அச் சமுதாயம் வளர்த்து வரும் கலைகள் தான் கலாச்சாரத்தின் வெளிப்பண்புகள். இஸ்லாமிய கலாச்சாரத்தின் வெளிப்பண்புகளாகிய கலைகளை இன்று ஆராய்வோம். இஸ்லாமிய கலாச்சார அமைப்பில் வளர்ந்த கலை, இலக்கியம், விஞ்ஞானம் ஆகியவைகளைச் சிறிது கவனிப்போம்.

''அறிவைத் தேடிச் செல்லுதல் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கடமையாக்கப்பட்டுள்ளது'' என்பது நாயக வாக்கியங்களுள் ஒன்று. ''ஆண்டவனின் படைப்புக்களைப்பற்றி ஆராய்வதற்கு ஒரு மணித்தியாலம் செலவழிப்பது ஒரு வருடகாலம் அவனைப் புகழ்வதைவிட மேலானது'' என்பது திருநபி வாய்மொழி. இது அவர்கள் கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பதைக் காட்டுகிறது.

மேற்கு நாட்டவர் தங்கள் பண்டைய கல்வி நிலையங்களையெல்லாவற்றையும் அழித்துக் கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருந்த அதே காலத்தில்தான் முஸ்லிம்கள் அறிவைத்தேடி தூர தேசங்களுக்குப் போய்க்கொண்டிருந்தனர். அலெக்சாந்திரியா போன்ற வாசகசாலைகளையெல்லாம் தீக்கிரையாக்கி அறிஞர்களையெல்லாம் கொன்று குவித்தார்கள் மேல் நாட்டவர்கள். கல்வியைச் சைத்தானின் வலையென்றனர்கள். மதத்தில் நம்பிக்கையில்லாதவர்கள் தான் இந்த வலையில் சிக்குவார்கள் என்றெல்லாம் நம்பியிருந்தார்கள் ஐரோப்பிய பாமரமக்கள். கிரேக்க, ரோமர்களின் அரிய நூல்களைப் பகிரங்கமாக எரித்தார்கள். ஐரோப்பிய சமூகம் மதகுருமார்களின் கோரப்பிடியில் அகப்பட்டு திணறிக் கொண்டிருந்தது. ரோம் சாம்ராஜ்யத்தின் மேற்குப் பகுதி அநாகரிகத்திற்கு இரையாகியது. அதன் கிழக்குப் பகுதி மட்டும் தான் ஓரளவாவது நாகரிகத்தில் இருந்தது. ஆனால் இங்கும் மதகுருமார்கள் ஆதிக்கம் தான் மேலோங்கியிருந்தது. இவர்களின் கையில் கல்வி சிறைப்பட்டிருந்தது. ஆனால் அதே நேரத்தில் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்திகளான கலீபா அல்-மாமூன் போன்றவர்கள் பண்டைய நூல்களைப் பெறும் ஒரே நோக்கத்துடன் கிழக்கு ரோம் சாம்ராஜ்யத்தின்மேல் போர் தொடுத்தனர். மண்ணாசையினாலும், பொன்னாசையினாலும் தான் அரசர்கள் போர் தொடுத்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் கல்விக்காக-பண்டைய நூல்களைப் பெறும் ஒரே காரணத்திற்காக-போர் தொடுத்ததை முதன் முதல் இஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாமிய சாம்ராஜ்யத்தில்தான் காண்கிறோம். கல்விக்கு எந்த இடத்தை முஸ்லிம்கள் கொடுத்தார்கள் என்பதை இதிலிருந்தே நாம் அறிய முடிகிறது. கொன்ஸ்தஸ்திஞேப்பிளில் சிறைப்பட்டிருந்த அறிவுக் களஞ்சியங்களையெல்லாம், கலீபாக்கள், மனித சமுதாயத்தின் பொதுச் சொத்தாக மாற்றினார்கள். யுத்தத்தில் வெற்றிபெற்றவர்களை அடிமைகளாக்கிக் கொண்டுவந்ததைத் தான் வரலாற்றில் அறிகிறோம். ஆனால் இந்த யுத்தக் கைதிகளுக்கு மாளிகைகள் கட்டிக் கொடுத்து எல்லா சௌகரியங்களையும் செய்து கொடுத்ததை இஸ்லாமிய சாம்ராஜ்யத்தில் மட்டும்தான் காண்கிறோம். பண்டைய கிரேக்க ரோம நூல்களை மொழிபெயர்ப்பதுதான் இவர்களது வேலை. இவர்களுடன் சேர்ந்து முஸ்லிம் அறிஞர்களும் நூல்களை மொழிபெயர்த்தார்கள். பண்டைய நூல்கள் அழிந்துபோகாமல் காப்பாற்றி பிற்சந்ததியினருக்குக் கொடுத்தபெருமை முஸ்லிம்களையே சாரும்.

முஸ்லிம் விஞ்ஞானிகள் ரசாயன சாஸ்திரம் (Chemistry) போன்ற சாஸ்திரங்களில் ஆராய்ச்சிகளைச்செய்து முடிவுகளை மற்ற அறிஞர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தார்கள். இதில் என்ன விசேஷம் என்றூர் இதுவரையில் கிழக்கு நாடுகளில் அறிஞர்கள் தங்கள் அறிவை பிறருக்குச் சொல்லாமல் மிகவும் ரகசியமாகவே வைத்திருந்தார்கள். முஸ்லிம் விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சிகளின் முடிவுகளை வெளியிட்டதுமல்லாமல் இம்முடிவுகள் சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தமான வேறுகருத்துக்களையும் வரவேற்றார்கள். அவர்கள் உடனடியாக முடிவுகளுக்குவரவில்லை. ஆராய்ச்சி செய்து படிப்படியாகத்தான் உண்மையை அறிந்தார்கள். அவர்கள் தங்கள் ஆராய்ச்சிகளினால் கண்ட முடிவுகள்தான் இன்று ரசாயன சாஸ்திரம் (Chemistry) வளர்வதற்கு அஸ்திவாரமாய் அமைந்தது. எந்த ஒரு முடிவையும் காரணம் இல்லாமல் ஏற்றுக்கொள்ளக்கூடாது. எவனொருவன் தனது முடிவுகளுக்குக் காரணம் காட்டுகிறானே அதை உண்மையென்று கொள்ள வேண்டும் என்று ஒரு முஸ்லிம் விஞ்ஞானிஆராய்ச்சி செய்வதைப் பற்றிக் கூறியிருக்கிறார்.

பௌதீக சாஸ்திரம் (Physics) சாஸ்திரத்திலும் இதே முறையைத்தான் கையாண்டார்கள். எந்த ஒரு முடிவையும் ஆராய்ச்சி செய்ததன் பின்னரே ஏற்றுக்கொண்டார்கள். கணித சாஸ்திரம் (Mathematics) க்ஷேத்திர கணிதம் (Geometry) போன்ற சாஸ்திரங்களில் வல்லுனர்களாக விளங்கினார்கள். அல்ஜெப்ரா என்று சொல்லப்படும் குறிக்கணக்கியலைக் கண்டு பிடித்தவர்களும் அவர்களே. அல்ஜெப்ரா என்ற வார்த்தை அறபுமொழியிலிருந்து வந்தது. தாவர இயலில் (Botany) ஆழ்ந்த அறிவு படைத்திருந்தார்கள். இயற்கை சாஸ்திரத்தில் (Natural History) முதலில் கிரேக்க விஞ்ஞானியும் தத்துவ ஞானியுமான அரிஸ்டோட்டிலைத்தான் பின்பற்றினார்கள். பிறகு தாங்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வியலில் ஆராய்ச்சிகளைச்செய்து முன்னேறினார்கள்.

நில நூல் சாஸ்திரத்திலும் முன்னேற்றமடைந்திருந்தார்கள். அன்றைய உலகில் கடலோடிகளாகவும், பிரயாணிகளாகவும், வர்த்தகர்களாகவும் திகழ்ந்தவர்கள் அரபியர்களே. பிரயாணங்களில் தாங்கள் அறிந்த விபரங்கள் எல்லாவற்றையும் எழுதிவைத்தார்கள். அரபியர்கள் எந்தெந்த இடங்களுக்கெல்லாம் சென்றார்களோ அந்தந்த இடங்களையெல்லாம் விளக்கப்படங்கள் மூலம் குறித்து வைத்தார்கள். தாங்கள் சென்ற நாடுகளின் வாழ்க்கையைப்பற்றியும், மக்களின் நிலையைப் பற்றியும், அவர்களது அரசியல் சமூக வாழ்க்கையைப்பற்றியும் அந்நாடுகளின் இயற்கை வளங்களைப்பற்றியும் எழுதி வைத்தார்கள்.

மருத்துவ தத்துவத்திலும் செயல் முறையிலும் அவர்கள் செய்த ஆராய்ச்சிகளின் முடிவுகள் காரணமாக வளர்ந்த யூனானி என்ற அரபிய மருத்துவ சாஸ்திரம் பல நூற்றாண்டுகளாக ஆசியாவில் மட்டுமல்ல, ஐரோப்பாவிலும் ஏற்றுக்கொள்ளப் பட்டுவந்தது. கிரேக்கர்கள் தோற்றுவித்த மருத்துவ சாஸ்திரம் முஸ்லிம்கள் வளர்க்காவிட்டால் உலகுக்குப் பயன்படாமலேயே போயிருக்கும். துப்புறவு சுகாதாரத்திற்கு எவ்வளவு அவசியம் என்பதை உணர்த்தியவர்கள் முஸ்லிம் மருத்துவர்களே. நோயாளிகளை மருத்துவ சாலைகளில் வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராமரிக்கும் வழக்கத்தை முதன் முதல் நடை முறைக்குக் கொண்டுவந்தவர்களும் இவர்களே. நோய்களைக் குணப்படுத்துவதற்கு ஊசிமூலம் மருந்தை உட்செலுத்தும் சிகிச்சைமுறை துருக்கியிலிருந்துதான் ஐரோப்பியர்கள் பதினெட்டாம் நூற்றாண்டில் பெற்றார்கள்.

வான சாஸ்திரத்திலும் விற்பன்னர்களாக விளங்கினார்கள் முஸ்லிம்கள். வான மண்டலத்தை ஆராய்வதற்கு விஞ்ஞானக் கருவிகளை உபயோகித்தார்கள். தங்கள் ஆராய்ச்சியின் மூலம் ஸ்பெயினிலும் சமார்கந்திலும் இருந்த வானாராய்ச்சி நிலையங்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை.

இவ்வான சாஸ்திரிகள் **புவியியல் வல்லுனர்களுடனும்,** பிரயாணிகளுடனும் தங்கள் முடிவுகளை ஒப்பிட்டுப் பார்த்ததின் பலனாக வான சாஸ்திரம் முன்னேறியது மட்டுமல்லாமல், முஸ்லிம் சர்வகலாசாலைகளில் பூகோளம் கல்வியின் ஒரு முக்கிய கருவியாகப் பாவிக்கப்பட்டும் வந்தது. பூமி உருண்டை வடிவமானது. அது சூரியனைச் சுற்றி வருகின்றது என்ற சாதாரண கருத்தைக் கொண்டிருந்ததற்காக புருனோமான் அறிஞர் ஒருவர் ஐரோப்பாவில் அநியாயமாகத் தீயில் எரிக்கப்பட்டார். கொலம்பஸ் போன்றவர்கள் முஸ்லிம் சர்வகலாசாலைகளிலிருந்து தான் பூமியைப் பற்றிய உண்மைகளை அறிந்தனர். முஸ்லிம் சர்வகலாசாலைகளில் ஐரோப்பாவின் பல பாகங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலிருந்தும் மாணவர்கள் வந்து கல்வி பயின்ருர் கள். இக்கல்வி நிலையங்களில் மதவேறுபாடுகள் தலைகாட்டவுமில்லை. எல்லாவகையான மதத்தவர் களும் வந்து கல்விபயின்ருர்கள். இஸ்லாமிய சாம் ராஜ்யத்தைத் தவிர்ந்த மற்ற நாடுகளிலெல்லாம் மதவேறுபாடு காரணமாக மக்கள் ஒருவரையொரு வர் பகைத்துக்கொண்டார்கள். ஆனல், இஸ்லா மிய உலகிலே எல்லா மதத்தவர்களும் பரஸ்பர ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள்.

இனி இஸ்லாமிய சாம்ராஜ்யத்திலே வளர்ந்த கலைகளைப் பற்றிச் சிறிது கவனிப்போம். சிற்பக் கலையில் எந்தவிதமான உருவத்தை அமைத்தலை இஸ்லாம் அனுமதிக்காது. இவ்வுருவக்கலை முஸ் லிம்களை சிலை வணக்கத்திற்குக் கொண்டு செல்லக் கூடும் என்ற காரணத்திஞற்ருன் இஸ்லாம் இவ் வுருவக்கலைக்கு இடம் கொடுக்கவில்லை. ஆனல் சிற்பக்கலை வேறுவழியில் வளர்ந்தது. வேர்டோவா கிரனேடா போன்ற இடங்களிலுள்ள சிற்பங்களைப் பார்க்கும்போதுதான் முஸ்லிம்கள் சிற்பக்கலை களில் எவ்வளவு முன்னேறியிருந்தார்கள் என்பது தெரியவருகின்றது. சிற்பக்கலையும் கட்டிடக் கலை யும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து வளர்ந்தன. ஓவிய மும் இவ்வாறே வளர்ந்தன. இஸ்லாமிய ஓவியம் என்று சொல்லுமளவிற்கு இவ்வோவியம் ஒரு தனி யுருவத்தைப் பெற்றது. பலவகையான வர்ணங் களைக்கொண்ட உருவரைப் படங்கள்தோன்றின. சங்கீதமும், நாடகமும் அவ்வளவாக வளர்க்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவில்லை. களியாட்டங்களில் தான் சங்கீதம் இடம் பெற்றது. வேஷம் போடுதலை முஸ்லிம்கள் விரும்பவில்லை. அதனால் நாடகமும் போற்றி வளர்க்கப்படவில்லை.

கொர்டோவாவிலிருந்து சமார்கந்த் வரைக்கும் அல்ஹம்ரா தொடக்கம் தாஜ்மஹால் ஈறாக உள்ள இஸ்லாமிய சிற்பங்களைப் பார்க்கும்போது இக்கலை பலவகையான வழிகளில் வளர்ந்திருக்கின்றன என்ற முடிவுக்கு வருகிறோம். அல்ஹம்ராவின் சிற்பக்கலைக்கும் தாஜ்மஹாலின் சிற்பக் கலைக்கும் ஒருவித ஒற்றுமை இருந்தாலும் அவைகளின் நுணுக்கப் பிரிவுகளில் தான் எத்துணை வித்தியாசம். வகைவகையான சிற்ப அமைப்புக்களும் கட்டிட வகைகளும் இருந்த போதிலும் அவையெல்லாம் இஸ்லாமிய கலைகள் என்றே பெயர் பெற்றன. வணக்கஸ்தலங்களும், மாளிகைகளும், கோட்டைகளும், நந்தவனங்களும் இவைகளையெல்லாம் முஸ்லிம்கள் அழகின் பிரதிபிம்பங்களாக மாற்றினர். இயற்கையின் அழகை ரசித்தனர் முஸ்லிம்கள். ஆண்டவனின் படைப்பில் இருக்கும் சௌந்தர்யத்தைக் கண்டுவியந்தனர். அதனாற்றான் இயற்கையோடு இயைந்த் அழகுச் சின்னங்களை அமைத்தனர். வர்ணங்களைக்கொண்டு விதவிதமான உருவரைப்படங்களை வரைந்தனர். அவர்கள் நிறுவிய அழகுச் சின்னங்கள் காம்பீர்யத்துடன் இஸ்லாமிய கலாச்சாரத்தின் சிறப்பை எடுத்துக்காட்டினர். கலைகளை வளர்ப்பதில் இஸ்லாமிய மன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு நிகர் அவர்களே. தனது மனைவியின் ஞாபகமாக உலகின் அதிசயங்களில் ஒன்றைத் தோற்றுவித்தான் ஷாஜஹான். தாஜ்மஹாலின் அழகை வர்ணிக்காதவர் எவருமில்லை. ஷாஜஹானைப்போன்ற கலா ரசிகர்கள் இஸ்லாமிய உலகில் இருக்கத்தான் செய்தனர். செவீல் என்ற தேசத்து அரசன் மோதாமித் (MO'tamid) தன்னுடைய அன்பு மனைவிக்கு அவள் உயிரோடு இருக்கும்போதே ஒரு பரிசளித்தான். அவன் மனைவி இயமாத்(Iamad) ஒரு முறை பிரயாணத்தின்போது மலை உச்சிகளிலுள்ள பனிப் படலங்களைக் கண்டு வியந்தாளாம். இதே காட்சியைத் தன்னுடைய மாளிகையின் அருகில் கொண்டு வந்து வைத்தான் அரசன். ஒரு மலையையே நிர்மாணித்து அதில் மரங்களை உண்டாக்கி அவைகளின் மேல் பனிபெய்யுமாறு செய்தான். கோர்டோவாவிலுள்ள அதிசயங்களில் இதுவும் ஒன்று. இயற்கைக்கு மாறாக அவர்கள் எதுவுமே செய்யவில்லை. கலையென்ற பெயரில் மனிதனது சிற்றின்ப உணர்ச்சிகளைத் தூண்டிவிடக்கூடிய ஆபாசங்களை வளர்க்கவில்லை. இயற்கையோ ஒட்டிச் செல்லும் அழகைத் தான் வளர்த்தார்கள், ரசித்தார்கள்.

அரபு லிபியைக் கொண்டு ஒரு புதிய கையெழுத்துக் கலையை வளர்த்தார்கள். இதற்கு அறபெஸ்க் (Arabesqu) என்று பெயர். இது இஸ்லாமிய உலகில் மட்டுமே வளர்ந்த ஒரு கலை. உரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வப் படங்களை வரைவது இஸ்லாத்துக்கு புறம்பான தாகையால் இக்கலையை முஸ்லிம்கள் வளர்த்தார்கள். இனி இஸ்லாமிய இலக்கியத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்பு அரேபியாவில் கவிதை இலக்கியம் ஒரே துறையில் தான் வளர்ந்தது. நாட்டுப்பாடல்கள் நிறைந்த நாடுதான் அரேபியா. அரேபிய மக்கள் தாங்கள் கூடும்போதெல்லாம் அழகான கவிதைகளைப் பாடி மகிழ்வார்கள். இஸ்லாத்தின் தோற்றத்திற்குப் பிறகும் இந்நாட்டுப் பாடல்கள் வளரத்தான் செய்தன. ஆனால் அதே நேரத்தில் இஸ்லாமிய இலக்கியம் கிளைவிட்டுப் பலவழிகளிலும் வளரத்தொடங்கியது.

மொழிபெயர்ப்பு இலக்கியம் பெருவாரியாக வளர்ந்தது. கிரேக்க, ரோம இலக்கியங்கள் அரபு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. கிரேக்க தத்துவநூல்கள் அரபுமொழியில் தோன்றத் தொடங்கின. அதே நேரத்தில் இஸ்லாமிய தத்துவம் என்று சொல்லுமளவிற்கு இஸ்லாமிய கோட்பாடுகளுடன் ஒட்டிய ஒரு புதிய தத்துவ இலக்கியமும் தோன்றியது. இஸ்லாமிய தத்துவ ஞானி அல்-கஸ்ஸாலியை நாம் மறக்கமுடியாது.

வரலாறு ஓர் இலக்கியமாக வளர்ந்தது முதன் முதலில் இஸ்லாமிய உலகில்தான். கிரேக்க, ரோம நாகரிகங்களில் வரலாறு ஓர் இலக்கியமாக வளர்க்கப்படவில்லை. அவர்கள் வரலாறு எழுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. இதிகாசங்களையும், புராணங்களையும் தான் எழுதினார்கள். பிறகு ரோம் சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த டெசிட்டஸ் (Tactus) போன்ற வரலாற்று சிரியர்கள் கதைகளையும், அரசர்களின் பெயர்களை யும் எழுதிவைத்தார்கள். அரசர்களின் பெயர்களை யும், அரச பரம்பரைகளையும், யுத்தங்களையும் எழுதுவதையே மேற்கு நாட்டவர் சமீப காலம் வரை வரலாறு என்று கருதிவந்தனர். வரலாற் றில் ஒரு தத்துவம் இருக்கிறது. அரசர்களின் வாழ்க்கை மட்டுமல்ல வரலாறு. வரலாறு எழு தும்போது அச்சமுகத்தை மறந்துவிடக்கூடாது. அச் சமூகத்தின் அபிலாசைகளை புறக்கணிக்கக் கூடாது என்றெல்லாம் வரலாற்றைப்பற்றிய ஒரு புதிய தத்துவத்தைக் கொண்டுவந்தவர்கள் முஸ் லிம்களே. உமறு, கித்தாபுல்-ஃபப்பக்றி, இப்னுல் அத்தீர், இப்னுகல்தூன் போன்ற வரலாற்றாசிரி யர்களுடைய வரலாற்று நூல்களைப் படிக்கும் போது அவை சமீபத்தில் எழுதப்பட்ட நூல்களோ என்று நாம் ஐயுறுமளவிற்கு அவைகளில் இன் றைய புதுமைக் கருத்துக்கள் நிரம்பியிருக்கின்றன.

பிரயாண இலக்கியம், நீதி இலக்கியம், இலக் கணம் போன்ற எல்லாதுறைகளிலும் இஸ்லாமிய இலக்கியம் வளர்ந்தது. பிரயாண இலக்கியத்தைப் பற்றிப் பேசும்போது இப்னு பதூதாவை நாம் மறக்கமுடியாது. வேறு எந்தமொழியிலும் இல் லாத அளவு அறபுமொழியில் இலக்கணம் வளர்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. தங்கள் மொழியை இவ்வளவு நுணுக்கமாக ஆராய்ந்தார்கள் முஸ்லிம்கள்.

இஸ்லாமிய கலாச்சாரம் என்ற பூங்காவினிலே கலை, இலக்கியம் போன்ற பூக்கள் மலர்ந்து அப் பூங்காவுக்கே நறுமணத்தை வீசிக்கொண்டிருந்தது.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய சகோதரர்களே ! இலக்கிய ரசிகர்களே !!

இதோ இன்பத் தமிழில்
இஸ்லாமிய இலக்கிய விருந்து !

அரிய சந்தர்ப்பம் ! நழுவ விடாதீர்கள் !!

தேன்சுவை மிக்க சீறுவிலிருந்து ஒரு துளி அமுதம்-
திருநபி வாழ்க்கையில் நடந்த மாபெரும் யுத்தம்

# சீறுப் புராணம்

பதுறுப் படலம்

(இரண்டாம் அழகிய பதிப்பு)

**விற்பனையாகிக்கொண்டிருக்கிறது.**

இன்றே வாங்கிப் படியுங்கள் !
இலக்கிய இன்பமடையுங்கள் !!

ஆசிரியத் தோழர்களே ! மாணவ மாணவிகளே !!

இஸ்லாமிய இலக்கிய நூல் இல்லையே என்று
ஏங்கிக்கொண்டிருந்தீர்களே !

## சீறுப் புராணம் - பதுறுப் படலம்

★ 150 பாடல்கள்
★ அரும்பதவுரை
★ பொழிப்புரை
★ விளக்கவுரை
★ அறபுப் பதவிளக்கம்
★ பயிற்சி வினாக்கள்
★ செய்யுள் முதற்குறிப்பகராதி
கதைத் தொடர்புகளுடன்,

யாவரும் எளிதாகப் படித்து விளங்கும் முறையில்
தயாராகியுள்ளது.

158 பக்கங்கள் ஆனால் விலை

ரூ. 1—50 தான்

தபால் செலவு இனம் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org